# அப்பல்லோ-11 வீரர் சந்திரனில்நடப்பது பூமியில் கேட்கும்?

Registered as a News-paper in Ceylon விலே சதம் 15 ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு

EELANADU
National Tamil Daily
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
மலர் 11
இதழ்:154
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆடி 1 ரபி. ஆகி 30 புதன்கிழமை [16-7-69]

கென்னடிமுனை, ஜூலை 15

**சந்திரனில் அப்பல்லோ.11 வீரர் ஆம்ஸ்ட்ரோங் முதலாவதாக அடியெடுத்து வைக்கும்போது சப்தம் எதுவும் ஏற்படாது. என்ருலும் விஞ்ஞானிகள் பூமியிலிருந்தபடியே விண்வெளிவீரர் சந்திரனில் நடந்து செல்வதை கேட்பார்கள்'.**

சப்பாத்துககால தரையை மிதிககும் ஓசையா அவர்கள் காதில விழும்? அலல அலல! அம்புலி மேல் காற்று ஏதும் இல்லே. ஆதலால் அங்கு ஓசை உண்டாகாது

நிலா இறங்கும் விண்வெளி விமானிகள் அங்கு செய்யவேண்டிய பணிகளில் ஒன்று நில அதிர்வுப் பதிவுக கருவி ஒன்றை அங்கு தரையில் நிறுவுவதாகும். சந்திரனுககுள் உண்டாகக்கூடிய அதிர்ச்சிகளேப் பதிவு செய்யும் கருவி இது பூமியில் நிலநடுககத்தைப்பதிவு செய்யும் கருவி போன்றது.

இது எவ்வளவுநுண்மையானது என்ருல இதை நிலாத்தரையில் வைத்து விசையை இயககிவிட்டு விலகும் விண்வெளி விமானி அடி எடுத்து வைப்பதனுல் உண்டாகும் அதிர்வைககூட அது பதிவுசெய்துவிடும்.

அதுதான் பதிவுசெய்யும் தகவல்களேப் பூமிககு வானெலி மூலம் அஞ்சல் செய்ய அதனுள் ஒலிபரப்பு கருவியும் இருககிறது. ஆகவே விண்வெளி விமானிகளின் காலடி அதிர்வைப் பதிவுசெய்த தகவலும் பூமிககு அஞ்சலாகிவிடும்.

இங்கே விஞ்ஞானிகள் முன்னுள்ள ஒரு கருவி முகப்பில் ஒரு முள் ஆடும்; அவர்கள் 'கேட்கும்' அம்புலி நடை 'ஓசை' இதுவே.

நிலத்தரையில நில அதிர்வுப் பதிவுக கருவியின் அருகே விண்வெளி விமானிகள் நடககும் போதெல்லாம் இவ்வாறுபூமியில் அது தெரியும்.

(விபரமான கட்டுரை-4-ம் பககத்தில்.)

---

அளவெட்டி, திங்கள்

பழை-வீமன்காமம் கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் இயங்கிவரும் நெசவு நிலேயத்தில், திருடர்கள் நெசவுநிலேயத்தில் போடப்பட்டிருந்த இரும்பு வலேயை பிரித்து உள்சென்று சேலேகளேயும், வேட்டிகளேயும், சாரங்களேயும் களவாடியுள்ளனராம்.

காங்கேசன்துறைப் பொலிசார் புலன் விசாரணே செய்கின்றனர்.

---

# அம்புலியை நோக்கி இன்று அப்பல்லோ-11 புறப்படுகிறது

## இருபதாம் நூற்ருண்டின் சரித்திர புகழ்மிக்க நிகழ்ச்சி

நியுயோர்க், ஜூலை 15

**வெட்டவெளியில் எட்ட முடியாத அந்தரத்தில் மனித இனத்தின் கற்பனேக்கும், கனவுக்கும் மட்டும் இலக்காகி வந்த சந்திரத் தலையில் போய் இறங்கி, உண்டு, உறங்கி, நடந்து திரிந்துவிட்டு மீண்டும் பூமிக்குத் திரும்பி வருவதற்காக இன்று மாலே மூன்று அமெரிக்க வீரர்கள் புறப்பட்டுச் செல்கிருர்கள்.**

இவர்கள் மூவரும் அப்பல்லோ-11 கலத்தில் கென்னடி முனேயிலிருந்து புறப்படுவதைப் பார்ப்பதற்காக இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருக்கிருர்கள். கென்னடி முனேக்கு அப்பால் ஏழு கப்பல்களேக் கொண்ட ரஷ்யக் கடற்படை அணியொன்று இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கின்றன. உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருக்கிருர்கள். [...]ரம் சிப்பந்திகள் இருககிருர்கள்.

இந்த பூமியில் மனிதன் தோன்றிய காலம்தொட்டு யுகயுகாந்திரமாக வானத்தில் தெரியும் சந்திர பிம்பத்தைஅண்ணுந்து பார்த்து அகமகிழ்வதிலேயே காலத்தைக் கழித்திருக்கின்ருன்.

குழந்தை பருவத்தில் 'அம்புலிமாமா'வென்று நம் தாய்மார்கள் நமக்கு சந்திரனே அறி[illegible] கிருர்கள்.

நம் கவிஞர்கள் அழகான [...] தில்மட்டுமின்றி மனிதஅறிவு வளர்ச்சியின் காரணமாக பரந்துவிரிந்துகிடக்கும்இந்த பிரபஞ்சம் எத்தனேச்சிறியதாகச் சுருககப்பட்டுவிட்டது என்பதையும் எடுத்துககாட்டுவதாக இந்தச் சந்திரப்பயணம் அமைகின்றது.

இன்று மாலே இலங்கை நேரப்படி 7 மணி இரண்டு நிமிடத்துககு கென்னடி முனேயிலிருந்து அப்பல்லோ-11 கலத்தை விண்வெளிககு எடுத்துச்செல்லும் 'சட்டர்ன்' ஏவுகணே செலுத்தப்படும். அதில் விண்வெளி

---

## நவரத்தினத்தின் புதியகட்சி

### ஆகஸ்ட்டில் அங்குரார்ப்பணம்

அல்லேப்பிட்டி, செவ்.

சுயாட்சி உரிமைகொண்ட தனியரசு ஒன்றைத் தமிழுக்கு நிறுவுவதென்ற நோக்குடனே புதியதொரு தமிழ்ககட்சியை ஆகஸ்ட் மாதத்தில் அங்குரார்ப்பணம் செய்ய ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. வி. நவரத்தினம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இப்புதியகட்சியின் கொள்கைகள் பற்றியும், அதன் அங்குரார்ப்பணத் திகதியைக் குறிக்கவும் இம்மாதம் 28-ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆலோசனேக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. கட்சியின் அமைப்பு விதிகள் இப்புதிய கட்சியினரின் நடவடிக்கைகள் ஆகியனவும் பரிசீலனே செய்யப்படும். எதிர்வரும் தேர்தலில் அபேட்சகர்களே நிறுத்தவிருக்கும் இப்புதிய கட்சி யார் யாரை அபேட்சகர்களாக நிறுத்துவது என்பது பற்றியும் இந்தஆலோசனேக் கூட்டத்தில் முடிவுசெய்யும்.

வாலிப முன்னணிகள், திரு. நவரத்தினத்தின் ஆதரவாளர்கள், மலேயகப் பிரமுகர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொள்வர்.

ஆகஸ்டில் உருவாகவிருக்கும் இப்புதிய கட்சி தனித்தியங்கும். வேருெரு கட்சியுடனும் இணேய மாட்டாது எனவும் தமிழ் இயக்கத்தின் விமோசனமே எமது எல்லே எனவும் திரு. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

## 5,000 பத்திரிகையாளர்

---

“வடபகுதி பௌத்தபாடசாலேகள்

## வளர்ச்சிக்கு அதிபர்கள் இடைஞ்சல்செய்வது குற்றம்'

### — கல்விமா அதிபதி

பருத்தித்துறை,செவ்வாய்

வடபகுதியிலுள்ள பௌத்த பாடசாலேகள் சிறப்பாக இயங்கி வருவது பற்றி கல்வி மாஅதிபதி திரு. ஜி. டி. குலதுங்க மகிழ்ச்சி தெரிவித்தார். பிரதம கல்வி உத்தியோகத்தர் திரு. பி. மெண்டிஸ் சகிதம் அச்சுவேலி, அல்வாய், கரவெட்டி ஆகிய இடங்களிலுள்ள பௌத்த பாடசாலேகளேத் தரிசித்த திரு. குலதுங்க, இப்பாடசாலேகளில் சேர்ந்து படிப்பதற்கு இப்பாடசாலே தலேமையாசிரியராவது முட்டுக்கட்டையிட்டால் அல்லது பாடசாலேச் சான்றிதழ் கொடுக்க மறுத்தால் அல்லது சான்றிதழ் வழங்குவதற்குத் தாமதித்தால் அது மிகப்பெரிய குற்றமாகுமென்று கூறிஞர்.

கரவெட்டிப் பாடசாலேக்கு நிலம் போதாதென்றும், அரசாங்கத்தால் இனிமேல் எடுக்கப்படும் நிலங்களில் ஆசிரியருக்கு வீடுகள் கட்ட ஒழுங்கு செய்வதாகவும் கல்விமா அதிபதி தெரிவித்தார். மாணவர் சராசரி போதாதெனக் கண்டால் மேலதிக ஆசிரியர் வேறு அரசாங்க பாடசாலேகளுக்கு மாற்றப்பட்டு அவர்கள் பின்னர் பயிற்சிக் கலாசாலேக்குப் பயிற்சி பெற அனுப்பப்படுவரென்றும் கூறிஞர். இப்பாடசாலேகளுக்கு அண்மையில் அரசாங்கத்தால் [...] பாடசாலேகள் வளர்ச்சி பற்றி திரு. குலதுங்க வட மாநிலக் கல்வியதிபதி திரு. எஸ். தணிகாசலத்தையும் கலந்துகொண்டார்.

---

இராமநாதன்

## இந்து பல்கலேக்கழகம் நிறுவப்படுமா?

### ஜி. ஜி. தகவல்

நல்லூர், புதன்

யாழ்ப்பாணத்தில் இராமநாதன், இந்துப்பல்கலே கழகம் நிறுவப்படுமா? என்பது இம்மாத இறுதிக்குள் தெரிந்துவிடுமென யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தம்மைச் சந்தித்த தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களிடம் தெரிவித்தார்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் இராமநாதன் பல்கலேகழகம் பற்றி எதுவும் குறிப்பிடாதது பற்றி திரு. பொன்னம்பலத்திடம் பிரஸ்தாபித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராமநாதன் பல்கலேக்கழக விஷயமாக, பிரதமர் டட்லி சேனநாயக்காவை இம்மாத இறுதிக்குள் சந்தித்து இதுபற்றி இறுதிமுடிவு எடுக்கப் போவதாகவும், திரு. பொன்னம்பலம் தெரிவித்தார். [...] பற்றி தெரிவிககப்படாததையிட்டு, தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணியும் அதிருப்தியடைந்திருப்பதாக தெரியவருகிறது.

---

இன்று

## யாழ்.மாநகர சபைக்கூட்டம்

யாழ்ப்பாணம்,புதன்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று மாலே 3-30 மணிக்கு சபைமண்டபத்தில் நகர முதல்வர் திரு. சி நாகராஜா தலேமையில் நடைபெறவிருக்கின்றது. நல்லூர் சங்கிலியன் தோப்பை புனருத்தாரணம் செய்தல் இரண்டாவதுகுடிநீர்த் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல், போன்ற பல முக்கிய பிரேரணேகள் இக் கூட்டத்தில் பரிசீலனே செய்யப்பட விருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய கட்சியினரின் நட வடிக்கைகள் ஆகியனவும் எனவும் திரு. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

## 5,000 பத்திரிகையாளர் சந்திரபயணம் பார்ப்பர்

கென்னடிமுனை, ஜூலை. 15 அப்போலோ-11 சந்திர னுக்கு நாளை பயணமாவ தைத் தொடர்ந்து, சரித் திரமுக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சியைக்காண சுமார் 5,000 பத்திரிகை யாளர் கென்னடிமுனையில் குவிந்திருக்கின்றனராம்.

## யாழ்ப்பாணம் பஜாருக்கு விசேஷ பொலிஸ் பிரிவு

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் பஜாரில் போக்குவரத்து ஒழுங்குகளை கவனிக்கவும், குற்றச் செய ல்களைத் தடுக்கவும் விசேஷ பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் இன்ஸ் பெக்டர் தலைமையில் 6 பொலிஸார் இதற்கென விசேஷ பயிற்சிக்கு உட் படுத்தப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் வடக்குக்கு விஜயம் செய்த உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். பி. டெடிகமவின் ஆலோசனை யைத் தொடர்ந்தே இப் பிரிவு அமைக்கப்பட்டுள் ளது.

பஜாரில் நடைபெறும் களவு, கொள்ளை வீதிவிப த்து, வாகன போக்குவரத் துக் கஷ்டம் ஆகியவற்றை தடுக்கக் கூடிய வழியில் இவ் விசேஷ பிரிவு இயங்கும்.

இங்கு கடமையாற்ற விசேஷ பயிற்சி பெறும் பொலிஸார் வேறு எங்கும் இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள் என்றும், இவ் விசேஷ பிரிவிலேயே கட மையாற்றுவார்கள் என்றும் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார். கா. நி)

## பிரதமர் ஓய்வு பெறுவார்

கொழும்பு, திங்கள் அடுத்த பொதுத் தேர் தலில் ஐக்கியதேசியக் கட் சியை வெற்றிபெறச் செய்து விட்டு, அந்த பாராளுமன் றக் காலத்தோடு தான் அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போவதாக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று தெரிவித்தார். ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் உரை நிகழ்த் திய பிரதமர் தொடர்ந்து கூறுகையில் அடுத்தபொதுத் தேர்தல் மிகமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென் றும் குறிப்பிட்டார்.

## மின்சாரசபை கையேற்கும்

கோட்டை, செவ். மின்சார விநியோகம் இன்று முதல் மின்சார சபை யிடம் கையளிக்கப்பட விருக்கிறது. உள்ளூராட்சி மன்றங்கள் மின்சார விநி யோகத்தில் கையாளும் தவருன வழிகளை நீக்கவும், பொதுமக்களுக்கு கூடிய நன்மையைச் செய்யவும் இந்தமுடிவு எடுக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டது.

யொன்று இந்த நிகழ்ச் சியைப் பார்ப்பதற்காகக் காத்திருக்கின்றன. உலக நாடுகள் பலவற்றின் பிரதி நிதிகள் இந்த நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருக்கிருர்கள்.

அத்லாண்டிக் கடலில் இருந்த 'ஹார்னஸ்ட்' என்ற விமானந் தாங்கிக் கப்பல் பசுபிக் சமுத்திரத்தில் அப் பல்லோ 11 வீரர்கள் திரும்பி வந்து இறங்கவிருக் கும் இடத்தை நோககிப் புறப்பட்டிருககின்றது. இந் தக கப்பலில் இரண்டாயி

குழந்தை பருவத்தில் 'அம்புலிமாமா' வென்று நம் தாய்மார்கள் நமக்கு சந்தி ரனை அறிமுகப்படுத்தியிருக் கிருர்கள்.

நம் கவிஞர்கள் அழகான இளம் பெண்களின் வதனத் துடன் பூரணச்சந்திரனின் பொலிவினை ஒப்பிட்டு மகிழ்ந் திருக்கிருர்கள். இந்தக் கற் பனைக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைத்து மனிதனின் துணிச்சல்மிக்க சாகசங்களை உலகுக்கு அறிவிக்கும் விதத்

நேரப்படி 7 மணி இரண்டு நிமிடத்துககு கென்னடி முனையிலிருந்து அப்பல்லோ-11 கலத்தை விண்வெளிககு எடுத்துச்செல்லும் 'சட்டர்ன்' ஏவுகணை செலுத்தப் படும். அதில் விண்வெளி வீரர்கள் நீல் ஏ. ஆம்ஸ்ட் ராவ், மைககேல் சாலின்ஸ், எட்வின்இ. ஆல்டிரின் ஆகிய மூவரும் அப்பல்லோ-11 கலத்தில் பிரயாணம் செய் வார்கள். இரண்டு லட்சம் மைல்களைககடந்து அவர்கள் சந்திரனை அடைந்து அங்கு அதிசயமிகக சாதனைகளை நிகழ்த்தியபின் பூமிககுத் திரும்புவார்கள்.

இந்த யுகத்தில் மனிதன் இதுவரை நிகழ்த்தியுள்ள சாதனைகளுகெல்லாம் சிகரம் வைப்பதாக இந்த சந்திரப் பிரயாணம் அமையப்போகி ன்றன.

பாடசாலைகளுக்கு மாற்றப் பட்டு அவர்கள் பின்னர் பயிற்சிக் கலாசாலைக்குப் பயிற்சி பெற அனுப்பப் படுவரென்றும் கூறினுர். இப்பாடசாலைகளுக்கு அண் மையில் அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட விளையாட்டு உபகரணங்களையும் அவர் பார்வையிட்டார். இப்

இராமநாதன் பல்கலைக் கழக விஷயமாக, பிரதமர் டட்லி சேனநாயக்காவை இம்மாத இறுதிக்குள் சந்தி த்து இதுபற்றி இறுதிமுடிவு எடுக்கப் போவதாகவும், திரு. பொன்னம்பலம் தெரி வித்தார்.

சிம்மாசனப் பிரசங்கத் தில் இந்து பல்கலை கழகம்

லூர் சங்கிலியன் தோப்பை புனருத்தாரணம் செய்தல் இரண்டாவதுகுடிநீர்த் திட் டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருதல், போன்ற பல முக்கிய பிரேரணைகள் இக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட விருக்கின்றன. (கா. நி)

## இளம் பெண் தற்கொலை; தந்தையும் தாயும் கைது

உடுப்பிட்டி, செவ் மகள் கிருமிநாசினிக்குப் பலியாஞர். தாயும், தந்தை யும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். இப்பரப ரப்பான சோகச் சம்பவம் கரணவாய் வடக்கு நவிண்டி லில் நிகழ்ந்துள்ளது

கந்தப்பு என்பவரின் மனைவியான திருமதி. சரஸ் வதி (வயது 35) என்னும் பெண்மணியே கிருமிநாசினி யினுல் பரிதாப மரணத்துக் குள்ளானவர் ஆவார். இரு குழந்தைகளுக்குத் தாயான சரஸ்வதியின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதால் இரு தினங்கள் நடைபெற்ற மரண விசாரணையின் பின்னரே பிரேதம் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது

காலஞ்சென்ற சரஸ்வதி தனது பெற்ருேரின் கொடுமைகள் தாங்காது தன்னுயிரை மாய்த்துக் கொண்டதாகவும், அவரது தாயும், தந்தையும் நீண்ட நாட்களாக இறந்தவருக்கு அடிக்கடி தொல்லைகள் கொடுத்துக் கொண்டிருந்த தாகவும், இதனுல் நீண்ட நாட்களாகப் பொறுமையுட னிருந்த சரஸ்வதி இறுதியில் கிருமிநாசினியைத் தஞ்சம் அடைந்ததாகவும் விசாரணை யின்போது தெரிய வந்தது.

பிரேத பரிசோதனையில் இறந்தவரின் உடலில் மர்ம காயங்கள் காணப்பட்ட தைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் இறந்த வரின் தாய் சிதம்பரப்பிள்ளை பாறுபதியும், தகப்பன் சின்னத்தம்பி சிதம்பரப் பிள்ளையும் வல்வெட்டித் துறைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் தாயும், தந்தையும் பிணையில் விடுதலை செய்யப் பட்டனர்.

சரஸ்வதியின் மரணம் கொலையா, தற்கொலையா என்பதில் சந்தேகம் கொண்ட மரணவிசாரணை அதிகாரி திரு. தாமோதரம் பிள்ளை தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்து மேற்கொண்டு புலன்விசாரணை செய்யுமாறு பொலிசாருக்கு உத்தர விட்டார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர். அருளானந்தம் பிரேத பரிசோதனை நடத் தினுர்.

இறந்தவரின் தாலிக் கொடியைக் கடந்தவருடம் இறந்தவரின் தாயார் அறுத் துத்தாக்கியதாகவும் முன்னர் பொலிஸில் புகார் செய்யப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது.

## வடபகுதிக்கு 16 பஸ்கள்

பருத்தித்துறை, செவ். உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம், கோப் பாய் எம். பி. திரு. எஸ். கதிர வேலுப்பிள்ளை, கிளிநொச்சி எ. பி திரு. கா. பொ. இரத் தினம், உடுவில் எம். பி. திரு. எஸ். தருமலிங்கம் ஆகியோ ரைக் கொண்ட ஒருகுழு விளையாட்டு தேசியமய சேவை அமைச்சர் திரு. வீ. ஏ. சுகததாசாவைச் சந்தித்து வடபகுதி பஸ் சேவைச் சீர் கேடுபற்றி விளக்கிக் கூறிய தன் விளைவாக பருத்தித் துறை, கோண்டாவில், கிளி நொச்சி, நெடுந்தீவு ஆகிய பஸ்டிப்போக்களுக்கு தலா நாலு பஸ்கள் அனுப்புவதாக மந்திரி வாக்குறுதியளித் தார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## 22-ம் தேதி ஆரம்பம்: 18 வழக்குகள் விசாரணை

யாழ்ப்பாணம், புதன் வடபகுதி அசைஸ் விசா ரணை இம்மாதம் 22-ம் திகதி காலை நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னி லையில் ஆரம்பமாகும் அன்று காலை நீதியரசர் தேவாலய த்திற்கு சென்று வழிபட்டு வந்தபின்னர் விசாரணைகள் ஆரம்பமாகும்.

வடபகுதி பிஸ்கால் அதி காரியான யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பீட் டர்ஸ் விசாரணைக்கெடுத் துக் கொள்ளப்படும் வழக் குகளின் பட்டியலை நீதியர சரிடம் கையளிப்பார். பொ லிஸாரின் அணிவகுப்புநடை பெறும்.

நீதிபதிகள், வழக்கறிஞர் கள், பொலிஸ் உத்தியோக த்தர்கள் பொதுமக்கள் அன்று சமுகமளித்திருப்பார் கள்.

இம்முறை 9 கொலை வழ க்குகளும், 7 கொலைமுயற்சி வழக்குகளும், 1 பலாத்கார வழக்கும், 1 கைக்குண்டு வழககும் விசாரணைககு எடு த்து கொள்ளப்படவிருககி றது.

## அம்புலியில் மனிதன் முதல்நாள்

என்ற கட்டுரை

நாளை வெளியாகும்

## வேலணை கி.ச. உபதலைவர்

யாழ்ப்பாணம், புதன் வேலணை கிராம சபையின் புதிய உப தலைவராக திரு. கந்தையா செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டு ளார்.

## மனச்சாட்சியின் ஆணையும் நாட்டுக்கான கடமையும்

### திரு. கிரி விடுத்த அறிக்கை

காங்கிரஸ் ஆட்சிமன்ற போர்டின் உள்நோக்கம் குறித்து தாம் சந்தேகிக்க விரும்பவில்லை. ஆனல அவர்கள் நாட்டுக் கும் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. அவர்கள் சார்ந்துள்ள கட்சிக்கு நேர் மையாக நடந்துகொள்ள விலலையென மனப்பூர்வ மாக நினைக்கிறேன் என்று திரு. கிரி விடுத்துள்ள அறிக் கையில கூறியுள்ளார்.

இந்த உன்னதமான பதவி யின் கண்ணியத்தையும், தார்மீக அதிகாரத்தையும் குறைக்கக்கூடிய சம்பவங் கள் சமீபத்தில நடந்தது குறித்து தாம் மனவேதனை அடைந்துள்ளதாக குறிப் பிடுகிருர்.

அவர் மேலும் கூறிய தாவது: தேசத் தலைவர் என்ற உயர்ந்த முக்கியமான பதவி, ஐக்கியத்தின் சின்ன மாக விளங்கவேண்டும் என்று அரசியற்சட்டத்தை வழிவகுத்தவர்கள் விரும் பினுர்கள். எனவே ராஷ் டிரபதி பதவி என்பது முற் றிலும் கட்சி விவகாரங் களுக்கு அப்பாற்பட்டதாக வைக்கப்படவேண்டும்.

கோஷ்டி அரசியலினுல நாட்டின் ஐககியமும், ஜன நாயகத்தின எதிர்கால முமே பாதிககப்பட அனு மதிகக லாகாது

நாட்டுககு சரியான வழி காட்ட அதுவும் கட்சிசண் ணேட்டத்தை விட்டிருகக வேண்டிய இந் சந்தர்ப்ப பத்தில சரின பாதையைக் காட்ட போர்ட் தவறி விட்டது என்றுதான் நான் சொலலமுடியும்.

மனசாட்சியின் ஆணை யும் நாட்டுககான கடமை யும் மிக உன்னதமானவை என்று நான் கருதுகிறேன். இந்த எண்ணம்தான் ராஷ் டிரபதி பதவியில போட்டி யிடுவது என்று முடிவுசெய்ய என்னைத் தூண்டியது.

# இந்திய ஜனதிபதி தேர்தல்: காங்கிரஸ் கட்சியின் கருத்து மோதல்

புதுடில்லி, ஜூலை 15 இந்திய ஜனதிபதி பத விக்கு காங்கிரஸ் கட்சி லோக்சபை சபாநாயகர் திரு. சஞ்சீவ ரெட்டியைத் தனது வேட்பாளராக நிறு த்த முடிவு செய்திருப்பது காங்கிரஸ் கட்சிக்குள் ளேயே கருத்துமோதல்க ளுக்கு இடமளித்திருக்கி ன்றது. ஆரம்பத்திலிருந்தே திருமதி காந்தி காங்கிரஸ் கட்சி ஆட்சி மன்ற போர் டின் முடிவு குறித்து அதி ருப்தி தெரிவித்து வந்துள் ளார். தற்காலிக ஜனதிபதி திரு. வி. வி. கிரியும் ஜனதி பதி பதவிக்கு போட்டியி டுவதென்று அறிவித்தி ருப்பதால் காங்கிரஸ் கட் சிக்காரர்கள் மத்தியில் பிளவு ஏற்படலாம் என்று கருதப் படுகின்றது.

திரு. கிரி உபராஷ்டிரபதி என்ற முறையில் ராஜ்ய சபையில் தலைவராக இரு ந்துவந்துள்ளார். காங்கி ரஸ் கட்சியின் ஒரு அங்கத் தவராகவும் அவர் பதவி ஏற்கும்வரை இருந்து வந் துள்ளார். எனவே இது வரை இருந்து வந்துள்ள மரபுப்படி அவரையே ஜன திபதி பதவிக்கு நியமித்தி ருக்க வேண்டுமென்று அனே கர் அபிப்பிராயம் தெரிவிக் கின்றனர்.

காங்கிரஸ் ஆட்சிமன்ற போர்டு கூட்டத்தில் ஜனதி பதி பதவிக்கு பெயர்கள் பிரஸ்தாபிக்கப் படடபோது பிரதமர் திருமதி காந்தி முதலில் திரு. கிரியின் பெய ரையே தெரிவித்தாராம். ஆனல் அதை போர்டு அங் கத்தவர்கள் ஏற்றுக் கொள் ளாமல் போகவே அவர் திரு. ஜெகஜீவன் ராமின் பெயரை பிரேரித்ததாக அவரே கூறியிருக்கிருர். ஜனதிபதி பதவி கட்சிப்பத வியல்ல வென்றும் பொதுக் கருத்தறிந்து அதற்கேற்ப ஒரு வேட்பாளரை தெரிந் தெடுப்பதற்குதாம் முயற்சி செய்து வந்ததாக திருமதி காந்தி தெரிவித்தார்.

திரு. கிரியை ஜனதிபதி பதவிக்கு வேட்பாளராகநிய மிக்காமல் விடுத்தால் அவர் ஒன்று பதவியிலிருந்து விலகி விடுவார் அல்லது உபஜனதி பதி பதவியிலேயே ஒட்டிக் கொண்டிருப்பார் என்று காங்கிரஸ் மேலிடத்தில் முக்கிய தலைவர்களான திரு. நிஜலிங்கப்பா, காமராஜர் பாட்டீல் போன்றவர்கள் எதிர் பார்த்ததாகவும் ஆனல் திரு. கிரி போட்டி யிடப் போவதாக அறிவித் திருப்பது அவர்களுக்குபெரி தும் அதிர்ச்சியைக்கொடுப்ப கொடுத்திருப்பதாகவும் கருதப்படுகின்றது.

### உபஜனதிபதி பதவி

திரு. கிரி ஜனதிபதி பத விக்குப் போட்டியிட முடிவு செய்திருப்பதால் உபஜனதி பதி பதவிக்கு தேர்தல் நடத்தவேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டிருக்கின்றது.

திரு. கிரி போட்டியிடுவ தால் காங்கிரஸ் அங்கத் தவர்களில் பலர் அவருக்கு வாக்களிக்கக்கூடும் என்றும் எதிர்க்கட்சிகளும் ஒருமித்து அவரை ஆதரித்தால் அவர் வெற்றிபெறுவது உறுதி யாகலாம் என்றும் அர சியல் அவதானிகள் கருது கின்றனர். தகுதியான ஒருவரை எதிர்க்கட்சிகள் நிறுத்திஞல் காங்கிரஸ் வாக்குகள் பிரிந்துபோய் எதிர்ககட்சி வேட்பாளர் வெற்றிபெறும் வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படு கின்றது. ஆனல் எதிர்க் கட்சிகள் அறுதியான முடி வுக்கு இன்னும்வரவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கச்சாய்கிராமசபை

வெள்ளாம் போக்கட்டி அரசினர் நன்கொடை (1968/69) ரேட்டு வேலைக்கான கேள்விகள் கச்சாய் கிராமசபைத் தலைவரால் 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள், இவ்வலுவலகத்தில் அல்லது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் (ரூபா 5000/-) ரூபா ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வேலைகளுக்கெனப் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரங்களில் 1969-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ந் தேதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்பதாக ரூபா 50 - வைப்புப்பணமாகவும் ரூபா 10/- பத்திரப்பணமாகவும் கட்டியதன் பேரில் விநியோகிக்கப்படும். இதில் பத்திரப்பணமான ரூபா10/- திருப்பிக் கொடுபடமாட்டாது.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(ஒப்பம்)
அ. த. சிதம்பரப்பிள்ளை
அக்கிராசனர்
கச்சாய் கிராமசபை,
கொடிகாமம், 14-7-1969.
1660

## திரைநீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். யுனைடெட் டெனிஸ் கிளப்பில் இம் மாதம் 20-ம் திகதி மாலை 5 30 மணியளவில் கிளப்பின் முன்னாள் தலைவர் டாக்டர் கே. ராஜாவின் உருவப்படம் யாழ். மாநகர சபை முதல்வர் திரு. எஸ். நாகராஜாவினால் திறந்து வைக்கப்படவிருக்கிறது முகாந்திரம் ஈ. பி. இராசையா தலைமையில் இவ் விழா நடைபெறும்.

## மூடப்படலாம்

சங்கானை, செவ்.

வலிகாமம் மேற்கு கூட்டுறவுச் சமாஜத்தின் சங்கானைச் சந்தைக்கு அருகாமையில் இருக்கும் சில்லறை விற்பனை நிலையம் புரட்டாசி மாதம் தொடக்கம் மூடப்படுமெனத்தெரியவருகிறது.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத் திருடன்
(புதிய கொப்பி)

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Paul Newman, Diane Cilento
in
HOMBRE

MANOHARA
JAFFNA
Daily4-45,7-00&94-5p m.
Sidcaesar, Veramiles
in
THE SPIRIT IS KILLING
(Technicolor)

4வது வாரம்!
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்



# வானொலி விவசாய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

வானொலி விவசாய அறிவுப் போட்டிகளும், பரிசளிப்புவிழாவும் இம்மாதம் 19-ந் திகதி யாழ்ப்பாணம் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், கமத்தொழில் திணைக்களத்தினரும் சேர்ந்து இப்போட்டியையும் விழாவையும் நடாத்துகின்றனர்.

இலங்கை ஒலிபரப்புமா அதிகாரி திரு. நெவில் ஜெயவீரா, கமத்தொழில் பணிப்பாளர் திரு. எம். எஸ். பெரேரா, வடபகுதி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோர் இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

19-ந் திகதி மாலை 4 மணிக்கு திருநெல்வேலியிலிருந்து விவசாய உபகரணங்களதும், விவசாய ட்ராக்டர் வண்டிகளதுப் ஊர்வலமும் யாழ்ப்பாண நகர் வழியாக விவசாயிகளின் ஊர்வலமும் புறப்பட்டு ஐந்து மணிக்கு விழா மண்டபத்தை வந்தடையும்.

விழா நிகழ்ச்சிகள் விபரம்:

5-30 மணி: வளர்ந்த விவசாயிகளின் இறுதிப் போட்டி, 6-15 மணி: வளர்ந்த இளம் விவசாயிகளுக்கிடையே போட்டி, 7 மணி: பரிசளிப்பு, 8 மணி: கதம்பவிழா. (கா. நி.)

# தெல்லிப்பளை யூனியன் விளையாட்டுபோட்டி முடிவுகள்

அளவெட்டி, செவ்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் வாட் இல்லம் சாம்பியனாகியது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டுப் போட்டிகள் சென்ற வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திரு. க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வாட் இல்லம் 165 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தையும் சிமித் டிக்ஷன் இல்லங்கள் 157, 135 ஆகிய புள்ளிகளைப் பெற்று இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றன.

சாம்பியன் ஸ்தானங்களை பெற்றோர் விபரம் வருமாறு:-

ஆண்கள் அதி சிரேஷ்ட பிரிவு எஸ். ஸ்ரீநாதன் (சிமித்) மத்தியபிரிவு என் ஞானசேகரம் (சிமித்)

கீழ்ப்பிரிவு: என். நவகுமார் (டிக்ஷன்) பாலர் கீழ் பிரிவு: எஸ். முரளிதாசன் (சிமித்)

பெண்கள்: அதிசிரேஷ்ட பிரிவு: என். வசந்தகுமாரி (சிமித்) சிரேஷ்டபிரிவு: ரி. கெங்காநிதி (சிமித்) சிரேஷ்ட பிரிவு: எம். சந்திரசேகரம் (சிமித்) மத்தியபிரிவு எஸ். செல்வராணி (வாட்) கீழ்ப் பிரிவு: எம். இலங்காதேவி (சிமித்) பாலர் மேற்பிரிவு பி. சுமதி (சிமித்).

## ஐ. வி. க. சாம்பியன்

ஊர்காவற்றுறை, செவ்.

அமரர் நல்லதம்பி வெற்றிக் கேடயத்துக்கான நான்காவது வருடாந்த கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் கரம்பொன் விளையாட்டுக்கழகமும் செற் அப் முறையில் விளையாடின. திரு பண்டா இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்,

ஊர்காவற்றுறை தெரிவுக் கோஷ்டியும் நவாலி சென் பீட்டர்ஸ் விளையாட்டுக்கழகமும் மின்னொளியில் கலந்துகொண்ட 'பாஸிங்கேம்' கரபந்தாட்டப் போட்டியும் பின்பு வல்வெட்டித்துறை யுனைட்டெட் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை தெரிவுக் கோஷ்டிக்குமிடையிலான

## தமிழ் காங்கிரஸ் நல்லூர் கிளை

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் காங்கிரஸ்கட்சியின் நல்லூர்க்கிளைக் கூட்டம் வழக்கறிஞர் திரு சி. அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது. தலைவராக யாழ். மாநகரசபை உறுப்பினர்

# உரும்பராய் இந்துக்கல்லூரி: அருச்சுன சாம்பியனாகியது

உரும்பராய், செவ்.

உரும்பராய் இந்துக்கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது. விளையாட்டுப்போட்டியை கல்லூரி அதிபர் திரு. அ. வயித்திலிங்கம் கல்லூரிக் கொடியை ஏற்றி தொடக்கிவைத்தார்

தர்மா, பீமா, நகுலா, அருச்சுன ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் அருச்சுன இல்லம் 222 புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது.

விளையாட்டுப்போட்டியின் சாம்பியன் விபரம் வருமாறு:

இன்டிவிடியுயல் சாம்பியன்: ஆண்கள்: [14, 16, 17, 19 வயதுக்குட்பட்டோர்] எஸ். சிவசுப்பிரமணியம், தர்மா; எஸ். சிறீரங்கநாதன், அருச்சுன; ஆர். பாஸ்கரலிங்கம், அருச்சுன; டி. அம்பிகைபாகன், தர்மா; கே. சின்னராசா, அருச்சுன. அதிமேற்பிரிவு: எஸ். குமரேஸ்வரராசா, நகுலா. பெண்கள்: கீழ்ப்பிரிவு: எஸ். பாமினி, அருச்சுன; கே. கௌரி, நகுலா. மத்தியபிரிவு: கே. ஆனந்தலட்சுமி, அருச்சுன. மேற்பிரிவு: எஸ். அருந்ததி, நகுலா.

கயிறு இழுத்தல்: தர்மா. ரிலே: தர்மா.

உயரம்பாய்தல்: ஆண்கள்: [14, 16, 17, 19 வயதுக்குட்பட்டவர்கள்] எஸ். சிவசுப்பிரமணியம், எஸ். திருநாவுக்கரசு, எஸ். மகாலிங்கம், கே. தவபத்மசிங்கம்.

நீளம்பாய்தல்: [14, 16, 17, 19 வயதுக்குட்பட்டவர்கள்] எஸ். இந்திரகுமார், என். சிவபாலன், டி. திலககுமார், கே நவனீதராசா.

**இல்ல புள்ளி நிலை:**

தர்மா 196 1/2, பீமா 145, நகுலா 160 1/2, அருச்சுன 222.

யாழ். பாடசாலை

# ஹொக்கி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தினால் யாழ். மாவட்ட கல்லூரிகளிடையே நடாத்தப்பட்டு வரும் ஹொக்கிப் போட்டியின், சென்றவார முடிவுகள் பின்வருமாறு:-

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில், யாழ்ப்பாணக் கல்லூரி 3-0 கோல்களால் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கே. பூபாலும், திரு. சி. நடேசனும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

0 0 0

## கோப்பாய் வெற்றி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும், யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'ஏ' பிரிவு போட்டியில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 4-0 கோல்களால் வெற்றி பெற்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிககு, திரு. கே. பூபாலும், திரு. சி. நடேசனும் மத்தியஸ்தர்

## இன்றைய பலன்

மேஷம்- செய்தொழிலால் சிறப்புண்டு. மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும், சிலருக்கு அதிர்ஷ்ட இலாபங்களும் கிடைக்கலாம். சுற்றுடலில் நல்ல திருப்பம் ஏற்படும். உற்சாகமான தினம்.

ரிஷபம்- பொருளாதாரத்துறையில் விருத்தி ஏற்படும். பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும். புதிய முதலீடுகள் வெற்றியைத் தரும். குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். கொண்டாட்டங்களும் உண்டு.

மிதுனம்- எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல் வாங்கல்களால் பிணக்குகள் ஏற்படும். நண்பர்களைப்பகைத்துக்கொள்ளுவீர்கள். வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

கடகம்- சிந்தனையின் தாக்குதல்கள் உங்களை சிந்திக்கவைக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுகளுக்கும் இடமுண்டு. அவசரமுடிவைத் தவிர்க்கவும்.

சிம்மம்- இல்லத்தில்



# அன்பு வழி

காசி

ஜெய்சங்கரும் விஜயலக்ஷ்மியும் இணைந்து நடிக்கும் போது இளம் உள்ளங்களுக்கு ஓர் இனிய விருந்து கிடைக்கும் என்பதை அன்பு வழியிலும் இருவரும் நிரூபித்து விட்டார்கள். அழகும் இளமையும் இணையும் போது அதைப் பார்த்துக் கொண்டிருப்பதே ஒருதனிச் சுகமளிக்கத்தான் செய்கிறது.

காதல் காட்சிகளை டைரக்டர் நடேசன், வெகு சுவையாக எடுத்து இருக்கிறார் என்று கூறலாம் அல்லது ஜெய்சங்கரின் வாட்டசாட்டமான உடலையும் விஜயலக்ஷ்மியின் ஒயிலாகவளையும் உடலமைப்பையும் ஒழுங்காகப் பயன்படுத்தியிருக்கிறார் என்று கூறலாம்.

'அன்பு வழியில்' ஒரு கொலையும் சேர்க்கப்பட்டிருந்தாலும் இக் கொலையை செய்தவர் யார் எனபதைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் விசாரணை சுறுசுறுப்பை ஏற்படுத்துகிறது.

தாம் விவாகம் செய்த நாளை தமது குடும்பத்துடன் மிகவும் குதூகலமாக கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில் தனது உற்ற நண்பர் ஒருவரிடமிருந்து கிடைத்த ஓர் அவசர டெலிபோன் அழைப்பை ஏற்று சதானந்தம் புறப்பட்டு வெளியே செல்கிறார். தனது அன்பு நண்பரான நித்தியானந்தத்திற்கு ஏதோ ஒரு உதவி செய்வதற்காக தமது மனைவியின் நகை நட்டுகள் அனைத்தையுமே தம்முடன் கொண்டு சென்ற சதானந்தம் அங்கு கொலை செய்யப்படுகிறார். பணத்துக்கும் செல்வத்துக்கும் ஆசைப்படும் சதானந்தத்தினது மூன்றாவது நண்பரான மூர்த்தி, நகை, நட்டு அனைத்தையும் சூறையாடுகிறான்.

கொலை செய்யப்படும் சதானந்தமாக வி. எஸ். ராகவனும், நித்தியானந்தமாகடி எஸ். முத்தையாவும், மூர்த்தியாக ஓ. ஏ. கே. தேவரும் நடிக்கின்றனர்.

கொலைகாரனின் பாத்திரத்தை ஏற்று நடித்துள்ள ஓ. ஏ. கே. தேவர் உண்மையான கொலைகாரனாகவே காணப்படுகிறார். தோற்றத்தாலும் நடைபாவனையிலும் பயங்கரவாதியாகக் காட்சியளிக்கும் தேவர் பொலிசாரிடம் அகப்படாதவாறு மறைந்து திரியும் போது அவரது நடிப்பு சிறப்பாகவேயிருக்கிறது

கொலைசெய்யப்பட்ட வி. எஸ். ராகவனின் மனைவியாக பண்டரிபாயும், மகனாக ஜெய்சங்கரும் நடிக்கிறார்கள். கொலை செய்த தேவரின் மகனாக நாகேஷ் வருகிறார். நாகேஷ் செய்யும் திருமணம் திருமணமாகாதவர்களையும் சிரிக்க வைக்கிறது.

மா. ரா. கதைவசனம் எழுதிய 'அன்பு வழி'க்கு எம். எஸ். விஸ்வநாதன் இசையமைப்பு செய்துள்ளார்.

நேரம் போவதே தெரியாமல் சிரிப்புடனும் கண்களைக் குளிரவைத்துக் கொண்டும் இருக்க 'அன்பு வழி' நன்கு உதவுகிறது. இப் படம் இப்போது யாழ். ராணி சினிமாவில் ஓடிக் கொண்டிருக்கிறது.

# தென்மராட்சிக்கு பொது விளையாட்டுமைதானம்

## பொறுப்புகளைக் கவனிக்க குழு நியமனம்

மட்டுவில், செவ்வாய்

'தென்மராட்சி மக்களின் நலன் கருதி ஒரு பொதுவிளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியது மிக அவசியம். இப்பொறுப்பு மிக்கவேலைகளைக் கவனிப்பதற்கு ஒரு செயற்குழு அமைக்கவேண்டும்' என நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் தென்மராட்சிப்பகுதி காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், தென்மராட்சிவிளையாட்டுக்கழகத்தலைவர் திரு. ஜெயவீரசிங்கம் வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்துதென்மராட்சிப்பகுதியில் பொது விளையாட்டுமைதானமமைப்

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கே. ஆர். விஜயா

முத்துராமன்

கீதாஞ்சலி

நடித்த



# நெஞ்சிருக்கும் வரை

இங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)

மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது

★ ரவிச்சந்திரன்

★ கே.ஆர்.விஜயா

★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு

இன்னும் பலர் நடித்த

முக்தா பிலிம்ஸ் அளிக்கும்

# நினைவில் நின்றவள்

தமிழ் காங்கிரஸ்கட்சியின் நல்லூர்க்கிளைக் கூட்டம் வழக்கறிஞர் திரு சி. அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது. தலைவராக யாழ். மாநகரசபை உறுப்பினர் வைத்தியர் திரு. அ. நடராஜாவும், பொதுக்காரியதரிசியாக திரு. சி. அம்பிகாபதியும், தனதிகாரியாக திரு. வீ. தயாபரனும் தெரியப்பட்டார்கள். வட்டார ரீதியாக நான்கு இணைக் காரியதரிசிகளும், 16 செயற் குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர்

(கா. நி)

கமும் மின்னொளியில் கலந்து கொண்ட 'பாஸிங்கேம்' கரபந்தாட்டப் போட்டியும் பின்பு வல்வெட்டித்துறை யுனைட்டெட் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை தெரிவுக் கோஷ்டிக்குமிடையிலான கரபந்தாட்டப் போட்டியும் நடைபெற்றன.

இப் போட்டியின் போது பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு முருகேசம்பிள்ளை கலந்து கொண்டார்.

ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர் விஜயலக்ஷ்மி நடித்த

# அன்பு வழி

ராஜா யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்

பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு

நடித்த

விஜயா சுரேஷ் கம்பைன்ஸ

# குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச்செலவுகளுக்கும் இடமுண்டு. அவசரமுடிவைத் தவிர்க்கவும்.

**சிம்மம்-** இல்லத்தில் இனிமையான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இனபந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். நீண்டநாள் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானியவிருத்திக்கும் இடமுண்டு.

**கன்னி-** சூழ்ச்சிவலை பின்னும், அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும். கடன்பட நேரிடலாம். மனஅடக்கம் வேண்டும்.

**துலாம்-** மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். கல்வித் துறையில் முன்னேற்றமுண்டு. தாய்வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனுக்கும் இன்று இடமுண்டு.

**விருச்சிகம்-** புத்திரவழியால் புகழ்வந்து சேரும். வெளியூர் புதினமுமுண்டு. குடும்பத்தில் சுமுகமான நிலை தென்படும். புதிய தொடர்கள் ஏற்படும். அதன்வழி முன்னேற்றமும் மகிழ்ச்சியும் தென்படும்.

**தனுசு-** எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்தல் நன்று,

**மகரம்-** காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியால் பொருள் வரவுக்கும் இடமேற்படும். பெரியோர்கள் ஆதரவுகிடைக்கும். கண்ணியமான தினம்.

**கும்பம்-** நண்பர்களின் உபத்திரவங்கள் அதிகமாகும். செலவு வகைகள் அதிகமாக இருக்கும். கடன்படவும்நேரிடலாம். நம்பிக்கை மோசடியும் நடக்கலாம். எனவே அவதானம் வேண்டும்.

**மீனம்-** நினைத்ததை முடிப்பதில் இன்றுவெற்றி காண்பீர்கள். பிதாவழி ஆதரவும் தாராளமகாக் கிடைக்கும். பொதுப் பணியில் நாட்டம் செலுத்துவீர்கள். செல்வாக்கும் பெருகும்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை

க. வேலுப்பிள்ளை

கோல்களால் வெற்றி பெற்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிககு, திரு. கே. பூபாலும், திரு. சி. நடேசனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

0 0 0

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், அருணோதயா கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 1-0 கோலால் வெற்றி பெற்றது. யாழ்ப்பாண கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. என். சோமசுந்தரமும், திரு. சி. நடேசனும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

0 0 0

## சமயான முடிவு

சென். ஜொன்ஸ் கல்லூரிக்கும். யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டி சமமாக (1-1) முடிவுற்றது. இடைவேளைக்குமுன் சென். ஜோன்ஸ் கல்லூரி ஒரு கோலைப் பெற்றது. இடைவேளையின் பின் மத்திய கல்லூரி ஒரு கோலைப் பெற்றது. யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கே. பூபாலும், திரு. கே. ரட்ணவும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (தே. நி)

ஊர்காவற்றுறை

## விளையாட்டுப் போட்டி முடிகள்

ஊர்காவற்றுறை, செவ். மத்திய மகாவித்தியாலயங்களின் விளையாட்டுப் போட்டியொன்று முதன் முறையாக ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டிக்கு ஊர்காவற்றுறை அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. ஸ்ரனிஸ்லோஸ் தலைமை வகித்தார்.

ஊர்காவற்றுறை, கரம்பொன், புங்குடுதீவு, வேலணை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டிகளில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி ஆண்கள் பிரிவில் சாம்பியனாகியது. பெண்கள் பிரிவில் புங்குடுதீவு மகாவித்தியாலயம் சாம்பியனாகியது. யாழ். மாவட்ட நீதிபதி ஜனாப்எம். ஜமீல் பிரதமவிருந்தினராக இப்போட்டியின் போது கலந்து கொண்டார்.

செயற்குழு அமைக்கவேண்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 16—7—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 திரைகானம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச் சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 மாணவர் நிகழ்ச்சி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 பேச்சு, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இடைவேளை இசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

டத்தில், தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தலைவர் திரு. ஜெயவீரசிங்கம் வலியுறுத்தினார்.

இதைத் தொடர்ந்துதென்மராட்சிப்பகுதியில் பொது விளையாட்டுமைதானமமைப்பதற்கான ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. அதில் பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். கே. சரவணமுத்து (டிறிபேக்கல்லூரி முன்னாள் அதிபர்) உபதலைவர்கள்: திரு. சு. கனகரத்தினம் (சாவகச்சேரி நகரசபைத் தலைவர்), திரு. எஸ் சுப்பையா (சாவகச்சேரி கிராமசபைத்தலைவர்), செயலாளர்: வழக்கறிஞர் திரு. எஸ். கே. திரவியநாயகம், உபசெயலாளர்: திரு. வி. ரி. நடராஜா, பொருளாளர்; திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை (தென்மராட்சிக் காரியாதிகாரி) மேலும் 19 பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

## வடமராட்சியில் சுகாதார வாரம்

பருத்தித்துறை, செவ். வடமராட்சிப் பகுதியில் இம்மாதம் 27-ம் திகதி தொடக்கம் அடுத்தமாதம் 3-ம் திகதிவரை சுகாதார வாரம் கொண்டாடுவதற்கான முயற்சிகளை, பருத்தித்துறை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.



இப்பொழுது நடைபெறுகிறது

# யாழ். வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ ஜெமினிகணேசன்

★ சரோஜாதேவி

நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்

நடித்த

1968-ம் ஆண்டின் சிறந்த படமெனப் பாராட்டுப்பெற்ற

ஓர் ஒப்பற்ற குடும்பச்சித்திரம்

கே. பாலசந்தரின்

# தாமரை நெஞ்சம்


"ராதா"

# கிரீன் தர்பார் பத்தி

மனதிற்கு இன்பமும் மகிழ்ச்சியும் தருவது

ராதா கிரீன் தர்பார் பத்திகளே!

இலங்கையில் அதிகம் விற்பனையாவது

ராதா கிரீன் தர்பார் பத்திகளே!

தயாரிப்பாளர்கள்:

ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏகவிநியோகஸ்தர்கள்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரிஸாவில் பயங்கர ரயில் விபத்து: 73 பேர் ஸ்தலத்தில் பலி; 130 பேர் படுகாயம்

புதுடில்லி, ஜூலை 15

சமீபகாலத்தில் ஏற்பட்டிராத மிகப் பயங்கர ரயில் விபத்தொன்று கடந்த இரவு ஒரிஸ்ஸாவில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த விபத்தில் 73 பேர் ஸ்தலத்திலேயே மரணமாகியிருப்பதாகவும் 130 பேருக்கு மேல் காயமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. விபத்து நடந்த இடத்தில் உடைந்த பெட்டிகளுக்கிடையில் இன்னும் பலரது சடலங்கள் கிடக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

ஒரிஸ்ஸாவில் ஜாஜ்பூர் ரயில்வே நிலையத்துக்கருகில் இந்த விபத்து ஏற்பட்டது கல்கத்தாவிலிருந்து சுமார் 200 மைல் தொலைவில் இந்த இடம் இருக்கின்றது.

## பூரிக்கு யாத்திரை போனவர்கள்

பூரியில் நடக்கும் சமய விழாவில் கலந்துகொள்வதற்காகப்போன யாத்திரிகர்களே இந்த விபத்தில் சிக்கியவர்களாவர். பிரயாணிகள் வண்டி ரயில்நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிதுநேரத்துக்கெல்லாம் ரயிலிலுள்ள அபாயச்சங்கிலியை யாரோ இழுத்ததாகவும் பின்னால் வந்த சரக்கு வண்டி அதன் மீது மோதியதால் இந்த விபத்துச் சம்பவித்ததாகவும் கூறப்பட்டது.

## இடிபாடுகளுக்கிடையில் மேலும் பலர்

விபத்துப்பற்றிய முழு விபரங்களும் இன்னும் கிடைக்கவில்லை. இன்னும் பலர் இடிபாடுகளுக்கிடையில் நசுங்கிக்கிடக்கவேண்டுமென்று அதிகாரிகள் கருதுகின்றார்கள்.

விபத்து நடந்த இடத்துக்கு விசேஷ அம்புலன்ஸ் ரயில்களும், வைத்திய உபகரணங்களுடன் கூடிய வண்டிகளும் அனுப்பப்பட்டுள்ளன. விசேஷ ரயில் ஒன்றில் வந்த டாக்டர்கள் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சையளித்தனர்.

## பலியானவர்களுக்கு நஷ்டஈடு

விபத்தில் மரணமானவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கு இந்திய அரசு உத்தரவிட்டிருக்கின்றது.

தற்காலிக ஜனாதிபதி திரு. வி. வி. கிரி இந்த விஷயத்தில் மரணமானவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துச் செய்தி அனுப்பியிருக்கின்றார்.

# தி. மு. க. வை தடைசெய்யக் கோரும் பிரேரணை வருகின்றது

## ஆர். ஜி. முன்னறிவித்தல்

கோட்டை, செவ்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை தடைசெய்ய வேண்டும் என்று கூறும் பிரேரணையென்றை தம்பதெனிய எம்.பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்க அக்டோபர் ஆறும் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்வார்.

திரு ஆர். ஜி. சேனநாயக்காவின் தீர்மான வாசகம் பின்வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகம் என அறியப்படும் பிறநாட்டு அரசியற் கட்சியும், அதன் அமைப்புகளும், இந்நாட்டில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவை நடாத்திவரும் பிரசாரமும் இந்நாட்டினது இறைமைக்கும் ஒருமைத் தன்மைக்கும் பயமுறுத்தலாயிருப்பதை முன்னிட்டு அவற்றைத் தடைசெய்ய வேண்டுமென இச்சபை கருதுகிறது.

# தீவுப்பகுதி அபிவிருத்திக்கு ஒரு சபை நிறுவக் கோரிக்கை

ஜனாதிபதி தேர்தல்

# இந்திய எதிர்க்கட்சிகள் ஒன்றுபட முயற்சி

புதுடில்லி, ஜூலை 15

இந்திய ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக எதிர்க்கட்சிகள் எல்லாம் ஏகோபித்த ஒரு முடிவுக்குவர வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் கருதுவதாகத்தெரிகின்றது.

இதுவிஷயமாக மேற்குவங்காள கூட்டணி கட்சிகள் விரைவில் ஒரு முடிவுக்கு வர விருப்பதாக மேற்கு வங்க முதல்வர் திரு அஜாய் குமார் முகர்ஜி கூறியிருக்கின்றார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கருணாநிதி இதுபற்றி ஏற்கனவே விடுத்துள்ள ஒரு அறிக்கையில் எதிர்க்கட்சிகள் யாவும் ஆகஸ்ட் மாதம் முற்பகுதியில்கூடி ஒருமுடிவு எடுக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்திருக்கின்றார்.

"அழியும் நிலையிலுள்ள ஆலயங்கள்

## கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பேற்க வேண்டும்"

மட்டுவில், செவ்வாய்

"ஆதரிப்பாரின்றி அழியும் நிலையிலுள்ள சகல மத ஆலயங்களையும், மடங்களையும் மத வேறுபாடின்றி, அவ்வப் பகுதிக் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுப்பெடுத்து நிர்வாகத்தை நடத்திவருமேயானால் ஆங்காங்கு ஆலயங்களின் ஜனநாயகம் செழித்தோங்க வழி பிறக்கலாம்" என கரைச்சி கிராமசபைத் தலைவர் திரு. தம்பையா செல்லத்துரை, கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவு தினவிழாவில் பேசும்போது தெரிவித்தார்.

கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு. ஏ. சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. செல்லத்துரை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மக்களுக்கு உணவு, உடை எத்துணை அவசியமோ, அதே போன்றுதான் மதமும் அவசியமாகின்றது. மத உணர்ச்சியின் அடிப்படையில் வாழும் மக்கள்தான் ஒரு நாட்டின் பொறுப்புள்ள பிரஜைகளாக அமையமுடியும். எனவே இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள சகல மதங்களுக்கும் சொந்தமான ஆதரிப்பாறற்ற ஆலயங்களையும், மடங்களையும் அவ்வப்பகுதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிருவாகப் பொறுப்பை ஏற்றுப் பாரபட்சமற்ற முறையில் நிர்வாகம் செய்யவேண்டும்.

இப்படிச் செய்துவருவதைத் தொடர்ந்து நமது நாட்டில் சகல மதங்களும் வளர வாய்ப்பு ஏற்படுவதுடன், இன்று நடைமுறையில் இருந்துவரும் தீண்டாமை, ஆலயப்பிரவேசம் என்ற சச்சரவுகளுக்கும் இடமின்றி ஜனநாயகம் தழைக்க வழிபிறக்கும்."

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம், கிளிநொச்சி காரியாதிகாரி திரு. யோகநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

# யாழ். மேயருக்கு எம். பி. பாராட்டு

மட்டுவில், திங்கள் ...ள் எம். பி. திரு. வி. "புண்ணியம், பட்டம், பதவி குமாரசாமி, யாழ் மாநகர ஆகிய அம்சங்களை உபயோ சபை மேயர் திரு. நாகலிங்கம் ... அரசியல் தலைவர் ராஜா உட்பட பலர் கல

மாவையில்

## தற்காலிக பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்பெக்டர் திரு. ஹேரத் தலைமையில் 35 பொலிசாரைக் கொண்ட தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்றுகோவில் வீதியில் நிறுவப்படவிருக்கின்றது.

(கா. நி

## இரு பிரேரணைகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் புகையிரத நிலயத்தில் குடிநீர் வசதி செய்து கொடுக்குமாறு வடமாகாண புகையிரத நிலைய அதிகாரியையும் ஜெனரல் மனேஜரையும் கோரும் பிரேரணையொன்றை யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. என். மார்க்கண்டு இன்று கூடும் மாநகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரவிருக்கிறார்.

காங்கேசன் துறையிலிருந்து பளை போக்குவரத்து சேவையிலீடுபட்டிருந்த இரு புகையிரதங்களை மீண்டும் சேவையிலீடுபடுத் தும்படி போக்குவரத்து அமைச்சரையும் ஜெனரல் மனேஜரையும் கோரும் பிரேரணையொன்றையும் இன்று சபையில் பிரேரிப்பார்.

கடந்த மூன்று வாரகாலமாக இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் உத்தியோகஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் வர்த்தகர்கள், விவசாயிகள்ஆகிய சகலரும் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதாக பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.——

## புதிய கட்டட வேலை ஆரம்பம்


ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்கதமிழ் கலவன் பாடசாலைக்குப் புதிதாக கட்டடம் அமைக்க முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன் புயலினால் தரைமட்டமான இப்பாடசாலையின் வகுப்புக்கள் இதுவரைகாலமும் சின்னமடு தேவாலயத்தில் நடைபெற்றுவந்தன.

நாரந்தனை — சரவணை இளைஞர் முன்னேற்றக்கழகமும் தீவுப்பகுதி எம். பி. யும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பமாகி

## புதிய கி ச தலைவர்



யாழ்ப்பாணம், புதன்

ஏழாலை கிராம சபையின் புதிய தலைவராக திரு. க. சிவகுரு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. எஸ். செல்லத்துரையை 4 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார். 1961-ம் ஆண்டு தொடக்கம் 1964-ம் ஆண்டு வரை மல்லாகம் கிராம சபையின் தலைவராக பணியாற்றினார்.

## தேர்த் திருவிழா

ஊர்காவற்றுறை, செவ்.

நாரந்தனை-சரவணை கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டனர்.

பருத்தித்துறை

## ஆஸ்பத்திரி விஸ்தரிக்கப்படும்

பருத்தித்துறை, செவ்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை விஸ்தரிப்புக்கான திட்டம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. உடுப்பிட்டி எம். பி. திரு. மு சிவசிதம்பரத்தின் முயற்சி காரணமாக எக்ஸ்றே படப்பிடிப்புக்கும் ரணசிகிச்சைகளுக்குமாக ஒரு கட்டடம் உருவாக்கப்படவுள்ளது. இவ்வேலை அநேகமாக இருமாத காலத்தில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிகிறது.

## உற்சவம்

சுழிபுரம், செவ்வாய்

சித்தன் கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயமருங்கே எழுந்தருளிய ஸ்ரீகாசி கதிர்காம உற்சவம் நேற்று ஆரம்பமானது. தொடர்ந்து பதினாறு தினங்கள் விழா நடைபெறும்.

## வாலிபர் சங்கம் அனுதாபம்

பருத்தித்துறை, செவ்.

கரவெட்டி சீன சார்புக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க விசேட கூட்டம் திரு. எஸ். கணேசன் தலைமையில் நடந்தபோது மறைந்த நீச்சல் வீரர் திரு. எஸ் நவரத்தினசாமியின் மறைவுக்கும், அகால மரணமெய்திய வாலிபர் சங்க உறுப்பினர் திரு. ரங்கநாதனின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன் சங்கக் காரியாலயத்தில் கறுப்புக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

'ஈழநாடு'

## பகிடிப்போட்டி—(1)

எமது புளுகுப் போட்டிக்கு பல நேயர்கள் பகிடிகளை அனுப்பி வந்தமையால் புளுகுப் போட்டியை மாற்றி பகிடிப்போட்டி என்று அமைத்திருக்கிறோம்.

### புளுகுப் போட்டி — (10)

இதில் பரிசு பெறும் புளுகு பின் வருவது:-

'அமெரிக்க, ரஷ்ய, இலங்கை, அரசாங்கங்கள் சந்திரமண்டலத்தில் தொழிற்சாலைகளை அமைக்க மூன்று விஞ்ஞானிகளை அனுப்பி வைத்தன. திரும்பி வந்த விஞ்ஞானிகளை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபோது, அமெரிக்க விஞ்ஞானி அங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி அபிவிருத்திக்கு ஒரு சபை நிறுவக் கோரிக்கை

## பண்டிதர் இரத்தினம் பிரேரணை

கோட்டை, செவ்.

தீவுப்பகுதிகளுக்கென அபிவிருத்திசபையொன்றை நிறுவும்படி அரசாங்கத்தை கோரும் பிரேரணை ஒன்றை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் ஆட்சி மன்றத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்ருர்.

அவர் கொண்டுவரும் தீர்மான வாசகம் பின்வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நெடுந்தீவு நயினதீவு, எழுவைதீவு, அனலைதீவு புங்குடுதீவு. லைடன்தீவு, மண்டைதீவு, காரைநகர் என்னும் தீவுகள் நிலவளமும் தண்ணீர் வளமும். மழை வளமும் குறைந்தனவாகவும் போக்குவரவு வசதிகள் குறைவும் குடிதண்ணீர் தட்டுப்பாடும் உடையனவாகவும் இருப்பதால் இவ்விடங்களில்வாழும் மக்களின் இடர்ப்பாடுகளை நீக்கி அவர்களின் வாழ்வை வளம்படுத்துவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படுவது இன்றியமையாததாலும், இவர்களின் பிரச்னைகள் இலங்கையின் ஏனைய பகுதி மக்களின் பிரச்னைகளிலும் வேறுபட்டனவாக இருப்பதாலும் இன்றுவரை இப் பிரச்னைகளைத் தீர்க்க விசேட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்காமையாலும் அனுராதபுரம் பேணற் சபை கண்டிக் கமக்காரர் புதுவாழ்வு ஆணைக்குழு என்பவற்றைப் போன்றதாகத் தீவுப்பகுதி அபிவிருத்திச் சபை' ஒன்றை நிறுவுவதற்கும் அதற்கு வேண்டிய நிதியை ஒதுக்குதற்கும் அரசாங்கம் உடனே நடவடிக்கை எடுக்கவேண்டுமென இச்சபை கருதுகிறது.

பின்வரும் பிரேரணைகளை ஆட்சிமன்றத்தில் கொண்டுவருவதற்கும் திரு இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்ருர்.

### தோட்டப் பாடசாலைகள்

தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல், -இலங்கையின் தேயிலை இறப்பர் தோட்டங்களிலுள்ள பாடசாலைகள் எல்லாவற்றையும் அரசாங்கம் பொறுப்பேற்பதற்கும் அப் பாடசாலைகளிற் கற்கும் மாணவர்கள் எல்லோருக்கும் ஏனைய பாடசாலைகள் கையாளும்பாட திட்டங்களுக்கிசைய எவ்வித வேறுபாடுமின்றிக் கல்வி ஊட்டுவதற்கும் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்கவேண்டுமென இச் சபை கருதுகிறது.

### அறிஞர்குழுதேவை

கல்விவெளியீட்டுத் திணைக்களத்திஞல் வெளியிடப்படும் பாடநூல்களை ஆராய்வதற்கான தெரிகுழுக்கள் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் சிங்களத்திலும் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ள பாடநூல்களும் மொழிப்பயிற்சி நூல்களும் பல குறைபாடுகள் உடையனவென அறிஞர்கள் பலர் கருதுவதால் இப்பாடநூல்களை ஆய்ந்து திருத்தியும் புதுக்கியும் வெளியிடுதற்கு சிங்கள அறிஞர்குழு ஒன்றையும் அரசாங்கம் நிறுவவேண்டுமென இச் சபை கருதுகிறது,

### இரண்டுமணிநேரம் ஓய்வு

சமய வழிபாட்டிற்கென இந்துசமய அரசாங்க ஊழியர்களுக்கு விடுமுறை ஏனைய சமய அரசாங்க ஊழியர்களுக்கு வழிபாட்டிற்காக ஓய்வு கொடுக்கப்பட்டிருப்பதுபோல இந்துசமய அரசாங்க ஊழியர்களுக்கும் வெள்ளிக்கிழமை தோறும் இரண்டுமணித்தியால ஓய்வு அடுத்தமாதம் தொடக்கம் கொடுக்கப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

——

## வீதிகளுக்கு ரூபா 7லட்சம்

நிக்கவரட்டியா, செவ்

நிக்கவரட்டியாத்தொகுதியிலுள்ள பின்தங்கிய இடங்களுக்கு வீதிகள்அமைப்பதற்காக பொதுவேலை அமைச்சு ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

இந்த மாவட்டத்தின் பிரதம பொறியியலாளர் பிரதான வீதிகளில் இருந்து கிராமங்களுக்குச் செல்லும் வீதிகளைத் திருத்தி வாகனப் போக்குவரத்துக்குத் தக்கதாக வமைக்க வேண்டியது பற்றி ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

## வில்ஸனை சந்திப்பார் நிக்ஸன்

லண்டன், ஜுலை 15

அமெரிக்க ஜனதிபதி நிக்ஸன் அடுத்த மாதம் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹரோல்ட் வில்ஸனைச் சந்தித்துப் பேசவிருக்கின்ருர். ருமேனியாவுக்கும் தூரகிழக்கு நாடுகளுக்கும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பும் வழியில் திரு. நிக்ஸன் பிரிட்டனில் சில மணி நேரம் தங்குவார். அப்பொழுது பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்ஸனை அவர் சந்திப்பார். உலக விவகாரங்கள் பற்றி இரு தலைவர்களும் பேசுவார்கள் என்று தெரிகின்றது.

——

## "பிரதமருக்கு நன்றி"

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் திரு. கே. சதானந்தன் கூட்டமொன்றில் கலந்துகொண்டு வேலையற்ற பட்டதாரிகள் பிரச்னைபற்றி எடுத்துக் கூறினர்.

அவர் பேசுகையில் கூறியதாவது:

"இச்சங்கம் வேலைவாய்ப்புக்குப் பாடுபடுவதோடு அரசாங்கமும் வேறு தனியார் நிறுவனங்களும் வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கும் வழிவகைகளையும் தெரிவித்துள்ளன. இச்சங்கம் சாதி, மத வேறுபாடற்றதும், அரசியல், அரசியல் கட்சி சார்பற்றதுமாகும்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் பிரதமர் எங்கள் பிரச்னைக்கு முதலிடம் கொடுத்திருப்பது குறித்து நாங்கள் அவருக்கு நன்றியுடையவராக உள்ளோம். அரசாங்கம் எங்கள் வேலையில்லாப் பிரச்னையை விரைவில் தீர்த்து வைக்குமெனப் பூரணமாக நம்புகிருேம்."

## எம். பி. பாராட்டு

மட்டுவில், திங்கள்

"பணம், பட்டம், பதவி ஆகிய அம்சங்களை உபயோகித்து, அரசியல் தலைவர்கள் பொதுமக்கள் மத்தியில் மதிப்பையும், அன்பையும் பெற்றுவிடலாமென்று எண்ணினல் அது தவறு. இதற்கு மாருக நேர்மையான உள்ளமும், உண்மையும், இலட்சியம் நிறைந்த சேவையும், பண்பும் தான் ஒரு அரசியல் தலைவனை பொதுமக்களின் அன்பின் உச்ச நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதற்கு யாழ்நகர பிதா திரு எஸ். நாகராஜா ஒரு எடுத்துக் காட்டாக இன்று விளங்கிக் கொண்டிருக்கிருர்,"

இவ்வாறு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி எம். பி. திரு வ. ந. நவரத்தினம்கூறினர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்சாவகச்சேரிமுன்னாள் எம். பி. திரு. வி. குமாரசாமி, யாழ் மாநகர சபை மேயர் திரு. நாகராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர். திரு. நாகராஜா மேலும் பேசுகையில் "மாணவர் புத்தகப் படிப்பில் மட்டும்தான் தமது எதிர்காலம் தங்கி இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தால், அது தவறு. மாணவ உலகம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும்.

பெரியோரைக் கனம் பண்ணல், உண்மை ஆகிய நெறிகளையும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். இப்படியான பண்புகளை நான் எனதுபள்ளிப்பருவமிருந்தே கடைப்பிடித்துவந்ததன் பயனகவே இன்று உங்கள் மத்தியில் நான் மதிக்கப்படுகின்றேன்" என்று கூறினர்.

விளையாட்டுக்களில் வெற்றி ஈட்டிய வீரர்களுக்கும், வீராங்கனைகட்கும் திருமதி எஸ். நாகராஜா பரிசுகளை வழங்கினர்.

## 'உயர் கல்விக்கு மேலும் வசதி செய்யவேண்டும்"

யாழ்ப்பாணம், புதன்

"நம் நாட்டு மாணவர்கள் தாய்மொழி மூலம் கல்விபெறுவதால் அமெரிக்கா இங்கிலாந்து ஆகிய பிறநாடுகளுக்குச் சென்று உயர்கல்வி பெற இயலாதவர்களாகிருர்கள். இதனுல் அவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் தடை ஏற்படாத வண்ணம் உயர்கல்வி கற்க அரசாங்கம், நாட்டில்மேலும் சில பல்கலைக்கழகங்களை நிறுவவேண்டியது அவசியம்".

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி சமர்ப்பித்துள்ள வருடாந்தஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று எமது நாட்டில் உள்ள கல்லூரிகளில் கல்வி பெற அளிக்கப்பட்டுள்ள வசதிகளுக்குத் தக்கவாறு பல்கலைக்கழகக் கல்வியிலும் அன்க்கப்படாததால் பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் கல்வி கற்க இடம்பெறுதலில் கஷ்டம் ஏற்படுகிறது. குறிப்பாக வைத்திய, பொறியியல்துறையில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கல்வி விரும்பும் மாணகள் பல்கலைக்கழகங்களில் இடம்பெற வசதிகள் குறைவாகவே இருக்கின்றன. இதனேடுஇந்தநிலையில்வளர்ந்து கொண்டுவரும் எமது ஜனத்தொகைக்கேற்பஇன்னும்பல் கலைக்கழகங்கள்சில நிறுவப்படுதல் அவசியமாகிறது 1951ல் இந்தியாவில் 27 பல்கலைக்கழகங்களும் 542 கலை, விஞ்ஞான, வர்த்தகக் கல்லூரிகளும் இருந்தன. 1966ல் இத்தொகை அதிகரித்து அங்கு 62 பல்கலைக்கழகங்களும் 1400 கல்லூரிகளும் 15 உயர் கல்வி நிறுவனங்களும் இருந்தன. எங்கள் மாணவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கும் எமது அரசாங்கமும் இத்தகையதொரு முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தங்கள் கல்வியைத் தாய்மொழிமூலம் கற்பதால் ஆங்கில அறிவு குறைந்தவர்களாகவே யுள்ளார்கள். ஆங்கிலக் கல்வித்தரம்குறைவாகவுள்ளதால் இவர்கள் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளுக்குச் சென்று கல்விபெற இயலாதவர்களாகவுள்ளனர். எனவேதான் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் 4 பாடங்களிலும் சித்தியெய்தியவர்களுக்கு பல்கலைக் கழகங்களில் இடமளிகக வேண்டும்.

இதே வேளையில் பொருளாதார திட்டக்குழு தனியார் துறையிலும் அரசாங்கத்திலும் 10'000ம் அதிகமான பட்டதாரிகளுக்கு வேலைவழங்கத் தீர்மானித்துள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்வருடாவருடம் உயர்கல்விக்காகப் பெருந்தொகையான மாணவர்கள் தெரிவு செய்யப்படும் இடங்களில் பல்கலைக்கழகங்களை அரசாங்கம் நிறுவ வேண்டும்.

பெற்றுவந்தன.

நாரந்தனை — சரவணை இளைஞர் முன்னேற்றக்கழகமும் தீவுப்பகுதி எம். பி. யும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி பாடசாலைக் கட்டட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. —...

## கிளிநொச்சியில் கடும் வரட்சி

கிளிநொச்சி, செவ்.

கிளிநொச்சிப் பகுதியில் கடும் வரட்சி நிலவுவதனுல் விவசாயம் பாதிக்கப்பட்டதோடு மக்களும் தங்கள் தேவைகளுக்கு நீர் இன்றிப் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள். இரணமடு குளத்தில் உள்ள நீர் விவசாயத்துக்கு போதாமையால் இம்முறை சிறுபோகம் இம்முறை சிறுபோகச் செய்கைக்கு நீர் வழங்கப்படவில்லை இதனுல் இன்று 20,000 ஏக்கர் நிலம் வீணுகிறது.

குடியேற்றத் திட்டங்களிலும் கிராம அபிவிருத்தித் திட்டங்களிலும் உள்ள கிணறுகளில் நீர் வற்றியதால் அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஒரு குடும்பத்துக்கு 5 கலன்நீர் விநியோகிக்கப்படுகிறது. கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நீர் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ......

## பதவி உயர்வு

வெள்ளவத்தை, செவ்.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த திரு. சி. கனகநாயகம் கொழும்பு பிரதம தபாற் கந்தோர் காசுக்கணக்குக் கிளையில் தலைமை லிகிதராகப் பதவி உயர்வுடன் நியமனம் பெற்றுள்ளார். இவர் ஓய்வு பெற்ற திரு. சைமன் அரியநாயகத்தின் இடத்தை நிரப்பியுள்ளார்.

## புளுகுப் போட்டி — (10)

இதில் பரிசு பெறும் புளுகு பின் வருவது:-

'அமெரிக்க, ரஷ்ய, இலங்கை, அரசாங்கங்கள் சந்திரமண்டலத்தில் தொழிற்சாலைகளை அமைக்க மூன்று விஞ்ஞானிகளை அனுப்பி வைத்தன. திரும்பி வந்த விஞ்ஞானிகளை பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டபோது, அமெரிக்க விஞ்ஞானி அங்கே மாஆலை அமைக்கப்போவதாகவும் ரஷ்ய விஞ்ஞானி உருக்கு ஆலை அமைக்கப்போவதாகவும் சொன்னர்கள். இலங்கை விஞ்ஞானியை கேட்டபோது, 'அங்கே எல்லா நாட்களும் போயா நாட்களாயிருக்கிறபடியால் எனக்கு அரசாங்க விடுமுறை ஆதலினுல் நான் எதுவும் செய்யவில்லை.' என்ருர்.

எழுதியவர்: ந. சிவராசா, பெருமாக்கடவை, அளவெட்டி.

## பகிடிப் போட்டி

பல நேயர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த புதிய போட்டியை மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கிருேம். இதில் உங்கள் நகைச்சுவையுடன் இலக்கியச்சுவையையும் உன்னதமான கருத்து சுவையையும் எதிர்பார்ப்போம். கீழ்த்தரமான பகிடிகளை எழுதவேண்டாம்.

உதாரணத்துக்கு ஒன்று தருகிருேம்:-

இரண்டு யாழ்ப்பாணத்தவர் வாஷிங்டன் நகருக்கு மேல் விமானத்தில் பறந்து செல்லும்போது ஒருவர் ஆபிரகாம் லிங்கனின் கோபுரத்தைக் காட்டி 'இது தான் லிங்கன் கோபுரம்' என்ருர். அதற்கு மற்றவர் 'அடடே, இங்கேயும் லிங்க வழிபாடு இருக்கிறதா?' என்று சொல்லி தலையில் குட்டிக்கொண்டார்.

இது ஒரு பழைய பகிடி. நிங்கள் எழுதும் பகிடி இதைப்போலவே இருக்கவேண்டுமென்பதல்ல. தயவு செய்து பழைய சஞ்சிகைகளைப் பார்த்து 'கொப்பி' அடிக்கவேண்டாம். கூடியவரை 'ஒரிஜினலா'யிருப்பதற்கே பரிசு கொடுப்போம். மிகச் சிறந்த பகிடிக்கு ரூபா இரண்டு பரிசாகவழங்கப்படும். போட்டிக் குழு தெரிவு செய்தவை 'ஈழநாடு' தினப்பதிப்பில் வெளியிடப்படும்.

### நிபந்தனைகள்:

ஒருவர் எத்தனை பகிடிகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு பகிடியுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்படவேண்டும். அனுப்பவேண்டிய விலாசம்: பகிடிப் போட்டி — (1) 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

விடைகளை 'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். 'ஈழநாடு' ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் பகிடிக்கு ரூபா இரண்டு (ரூ. 2/-) பரிசுப்பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 20-7 69.

'ஈழநாடு'

பகிடிப் போட்டி (1)

பெயர் ..................................

விலாசம்: ..................................

..................................

**மணிவாக்கு**

காரணங்களை ஆராய்ந்துபார்த்து சிந்தனை செய்தபின்னர் பெருந்தன்மையும் நிதானமும் பெறவேண்டும்.

— மகாத்மாகாந்தி


**ஈழநாடு**

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 1-ந் திகதி (16-7 69)


## சென்று வருக! வென்று வருக!!

மனிதன் நினைத்தால் ஆகாததுஎதுவுமில்லை. இதை நிரூபிப்பதற்கான மனிதகுல வரலாற்றையே மாற்றியமைத்து, மகத்தான சாதனையை நிலைநாட்ட, மனஉறுதியுடன் இன்று சந்திரனை நோக்கி 'அப்பல்லோ-11 என்றஅமெரிக்க விண்வெளிக் கப்பலில் புறப்படும்மூன்று விண்வெளி வீரர்களையும் 'சென்றுவருக! வென்று வருக!' என்று நாமும் வாழ்த்தி வழியனுப்பி வைப்பதில் பெருமைப் படுகிறோம்; பூரிப்படைகிறோம்.

'நிலா, நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா' என்றுகுழந்தைகளுக்கு ஆசைகாட்டி சோறு ஊட்டுவதற்கும், 'நிலவே நீதான் தூதுசொல்லாயோ' என்று காதலர் தூது விடுவதாக கவிஞர்கள் பாடுவதற்கும் கற்பனைப் பொருளாகக் காட்சியளித்து வந்த சந்திரனும் ஒருமண்டலம்தான் என்பதை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்தவிஞ்ஞானிகள் சந்திரனுக்குச் சென்று அதன் மூலம் மனித குலத்துக்கு நன்மை செய்ய முடியுமா என்றும் ஆராய்ச்சி செய்தனர். சந்திரனைச் சாடி அதன்மூலம் தமது ஆதிக்கத்தைப் பரப்பலாமென்ற நோக்கம் வல்லரசுகள்மத்தியில் இல்லையென்றுசொல்லி விடமுடியாது. பூமியில் நிலவும் ஆதிக்கப்போட்டி சந்திரனிலும் ஏற்பட்டுவிடக்கூடாதே என்ற அச்சம் மக்கள் மனதில் தோன்றுமலுமில்லை. சந்திரனைப் பற்றிய முழுத் தகவலையும் அறிந்துகொண்டபின் சந்திரமண்டலமூலம் பூமண்டலத்தின் முன்னேற்றத்துக்கும் அமைதிக்கும் வழி கிடைக்க வேண்டுமென்பதேமனித குலத்தின் அபிலாசைஷ. ஆனால் சந்திரனைச் சாடுவதில் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் இருந்து வரும் போட்டி பூமண்டலத்தின் அமைதியை மட்டுமல்ல சந்திரனின் அமைதியையே கெடுத்துவிடுமோ வென்ற அச்சமும் ஐயமும் இங்கு ஏற்படாமலில்லை. இருவல்லரசுக

கொள்ளவேண்டிய முயற்சிகள் பெருமளவில் இதுவரை பூர்த்தியடைந்திருக்கலாம்.

'அப்பல்லோ-11' விண்வெளிக் கலத்தில் இன்று சந்திரனை நோக்கிப் புறப்படும் மூன்று விண்வெளி வீரர்களும் பல மாதகாலம் பல சோதனைகளுக்குட்பட்டு, பல விதபயிற்சிகளைப்பெற்று சந்திரனை அடைந்து தகவல் அறிவதற்காக புறப்படுகிறார்கள். அவர்கள் சந்திரனைப் புகைப் படங்கள் பிடித்தும், 'டெலிவிஷன்' மூலம் சந்திரனை பூமியிலுள்ளவர்களுக்குக் காட்டுவதுடன் சந்திரனிலிருந்து மண்ணையும் கல்லையும் கூட இங்கு கொண்டுவருவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதே சமயம் சந்திரனிலிருந்து மண்ணை அள்ளிக் கொண்டு வருவதற்காக 'லூனா 15'என்ற ஆளில்லாத விண்வெளிக்கலம் ஒன்றை சோவியத்யூனியன் அனுப்பிவைத்திருக்கிறது. சந்திரனைச்சாடுவதில் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமுள்ள போட்டி ஓயவில்லை-

சந்திரனை மனிதன் அடைந்துவிட்டால்அந்த மகத்தான சாதனைமூலம் பூமியிலும்மக்களிடையேயுள்ள போட்டி மறைந்துவிடுமா? போட்டியும பொறாமையும் ஒழிய சந்திரனைச்சாடும் மனிதன் வழிகாட்டுவானா?

சந்திரனின்மீது மனிதன் கால்வைத்தாலும் கால்வைக்காவிட்டாலும்கூட, சந்திரனை நோக்கி இன்று புறப்படும் மனிதனின் முயற்சியும் துணிவும் சாதி, இன, மத, மொழி வேற்றுமைகளை வளர்த்து பதவிப்போட்டியிலும் சுயநல வேட்டையிலும் ஈடுபடும் நமது நாட்டு மக்கள், நாம் மிகமிகப்பின்தங்கியிருக்கிறோமென்பதை உணர்ந்து நமது நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் உழைக்க ஓரளவாவது சிந்தனையைத் தூண்டிவிட உதவவேண்டும்.

மனிதகுல அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும் அவர்க

# மனிதனின் கனவு நனவாகிறது!

அம்புலியில் அடியெடுத்து வைக்கப் போகிறான் மனிதன்!

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் கண்டுவந்த கனவு நனவாகிறது. அம்புலி எப்படி இருக்கும்? அதனைப் பிடிக்கலாமா? அதில் யாராவது வசிக்கிறார்களா? என்றெல்லாம் தன்னையே கேட்டு வந்திருக்கிறான் மனிதன்.

விண்வெளி யுகத்தின் இந்த 12-வது ஆண்டில் மனிதன் அம்புலியில் அடியெடுத்து உலாவப் போகிறான். அதன் மேல்பரப்பிலிருந்து மண் எடுத்துக் பூமிககுக கொண்டு வரப் போகிறான் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக.

### துணிவுடைய மூவர்

அம்புலி தரப்போகும் தகவல்களால் கவரப்பட்டும், மனிதனுக்கு இயற்கையாக இருக்கும் அறிவார்வத்தால் உந்தப்பட்டும், துணிச்சல் மிக்க மூன்று வீரர்கள் அம்புலிக்குப் புறப்படத் தயாராக இருக்கின்றனர். முன் எக்காலத்திலும் மேற்கொள்ளப்பட்டிராத இணையற்ற அம்புலிப் பயணத்துக்கு இவர்கள் தயாராகி விட்டனர்.

இம்மூவரில் இருவர் நிலாவானத்தில் புகுந்து கொண்டு அம்புலியில் இறங்குவர். சிலமணி நேரம் அம்புலியை ஆராய்ந்தபின்னர் அம்புலிக்கு மேலாகத்தாய்க் கப்பலில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் விமானியுடன் சேர்ந்து கொள்வர்.

ஃபுளோரிடா மாநிலத்தில் கென்னடி முனையில் இருக்கும் விண்வெளித் துறைமுகத்திலிருந்து இம்மூவரும் கிளம்பிச் சென்று எட்டு நாள் கழித்துப் பூமிக்குத் திரும்பி வருவர்.

அம்புலிப் பயணிகளான இந்த மூன்று யு. எஸ். விண்வெளி விமானிகளை நீல் ஏ. ஆம்ஸ்ராங், மைக்கல் காலின்ஸ், எட்வின் இ. ஆல்டிரின் மாபெரும் ஏவுகணையொன்று ஜுலை 16ம் தேதி விண்வெளியில் செலுத்தும். அவர்கள் திக்குத் திசை தெரியாத விண்வெளியில் இரண்டு லட்சம் மைல்களுக்கு மேல் பயணம் செய்து அம்புலியை அடைவர்.

பின்னர் ஆம்ஸ்ட்ராங், ஆல்டிரின் ஆகிய இருவரும் சுழற்றக்கூடிய நிலா வாகனத்தில் புகுந்து கொண்டு அதிலிருந்தபடியே அம்புலி

### விஞ்ஞானப் பலன்கள்

உலகம் தங்களை இவ்வாறு கூர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கையில் இந்த இரண்டு விண்வெளி வீரர்களும் தம் நிலா வாகனத்துக்கு வெளியே ஏறத்தாழ மூன்று மணி நேரம் தங்கியிருந்து பிளாஸ்டிக் பைகளிலும் உலோகப் பெட்டகங்களிலும் கற்களையும் அம்புலியின் மேல் பரப்பிலிருந்து பிற பொருள்களையும் சேகரித்துக் கொள்வர். பின்னர் மூன்று விஞ்ஞானக் கருவிகளை அம்புலியின்மேல் அமைப்பர்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு 1961 மே மாதம் அதிபர் கென்னடி இந்தப் பத்தாண்டுக் காலத்திற்குள் அம்புலியில் மனிதனைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்பதை அமெரிக்கா தனது தேசிய இலட்

இந்த அடைமொழிகள் அனைத்தும் ஸாட்டர்ன்-5 ஏவுகணைக்குப் பொருந்தும். அப்பல்லோ விண்வெளிக்கலமும் சேர்த்து ஸாட்டர்ன் ஏவுகணையில் தனித்தனியாக 30 லட்சம் உறுப்புகள் உள்ளன. அம்புலியில் இறங்கும் பணி வெற்றிகரமாகஇருக்க வேண்டுமானால் 100-க்கு 99,9999 வீதத்துக்கு இவை துல்லியமாக நம்பகமான முறையில் பணியாற்றவேண்டும்.

### யுகம் யுகமாக

25 நூற்றாண்டுகளாகக் குவிந்துள்ள அறிவை அடிப்படையாகக்கொண்டும் விஞ்ஞானத் துறையிலும் தொழில் நுட்பத் துறையிலும் ஒவ்வொரு பிரிவிலும் மக்கள் குலம் அறிந்து வைத்திருந்ததையும், பதிவுசெய்து வைத்திருந்ததையும் பயன்படுத்தியும் யு. எஸ். விண்

புதிய அம்புலிக் கலத்தைச் சோதிக்கவே இது நடத்தப் பெற்றது. இதற்குமுன் விண்வெளி விமானிகள் யாரும் செல்லாமல் 6 தடவை இப் புதிய கோள்விண்வெளியில் செலுத்திப் பார்க்கப்பட்டது.

அப்பலோ-7 பயணம் சிறந்த வகையில் வெற்றிபெற்றதால் 1968 டிசம்பரில் அப்பலோ - 8 பயணத்தில் மூன்று விண்வெளி விமானிகள் அம்புலியை 70 மைல் உயரத்தில் பத்துத்தடவை வலம்வந்து பார்த்துவிட்டுப் பத்திரமாகப் பூமிக்குத் திரும்பி வந்தனர்.

1969 மார்ச் மாதம் அப்பலோ-9 கிளம்பியது. பூமியைச் சுற்றிப் பத்துநாள் நடந்த இவ்விண்வெளிப் பயணத்தில் விண்வெளி விமானிகள் முதன்முதலாக நிலா வாகனத்தைச் சோதித்துப் பார்த்தனர். அடுத்து 1969 மே மாதம் அப்பலோ-10 விண்வெளி விமானிகள் 30 தடவை அம்புலியைச் சுற்றி வந்தனர். அவர்களில் இருவர் நிலா வாகனத்தில் புகுந்துகொண்டு அம்புலிக்கு 9 மைல் உயரம்வரை இறங்கி மீண்டனர்.

### ஒரே ஒரு கேள்வி

இப்பொழுது அப்பலோ திட்டம் உச்ச நிலையை அடைகிறது ஒரே ஒரு கேள்விக்குப் பதில் கூற வேண்டியிருக்கிறது. முக்கியமான பணி! முக்கியமான கேள்வி! இந்த மாபெரும் திட்டத்தின் விளைவாகத் தோன்றியுள்ள கருவியும் விஞ்ஞானத் தொழில்நுட்பமும், அம்புலியில் விமானிகளை இறக்கிப் பின்னர் அவர்களைத் திரும்பக் கொணருமா?

இக்கேள்விக்குப் பதில்தருவதற்கு மூன்றுபேர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹூஸ்டன் நகரிலுள்ள விண்வெளி விமானிகள் பயிற்சி நிலையத்தில் இப்பொழுது பயிற்சிபெற்று வரும் 52 விண்வெளி விமானிகளிலிருந்துதான் இம்மூவரும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். முதன்முதலாக அம்புலியில் அடியெடுத்து வைக்கப்போகும் விமானிகள் இவர்கள் இம்மூவரும் 1930ம் ஆண்டில் பிறந்தவர்கள். மணமானவர்கள்: குழந்தைகள் உள்ளவர்கள். விமானிகளாகப்பெரும்புகழ் பெற்றவர்கள். ஜெமினித் திட்டத்தில் விண்வெளிப்பயணம் செய்தவர்கள்.

அவர்களுடையபதில் முடியும் என்றானால், 500 ஆண்டுகளுக்குமுன் புது உலகை (அமெரிக்கா கண்டம்) கொலம்பஸ் கண்டுபிடித்த பிறகு மாபெரும் ஆராய்ச்சி யுகம் ஒன்று இப்பொழுது தோன்றுவதை உலகம் காணும்.

## சந்திரனில் மனிதன் இறங்கப்போகும் சரித்திரப்புகழ் மிகு அமெரிக்காவின் விண்வெளிப் பயணம் இன்று ஆரம்பமாகிறது

சியமாகக் கொள்ள வேண்டும் என்று கேட்டார். அதற்கு அமெரிக்கச் சட்டமன்றம் இசைந்தது.

அந்த முடிவு காரணமாக வரலாற்றிலேயே கண்டிராத அளவில் தொழில் நுட்ப அறிஞர்களின் பணியும் பொருள்களும் திரட்டப்பட்டன.

### 4 இலட்சம் பேர்களின் முயற்சி

விஞ்ஞானிகள், பொறியியல் வல்லுனர்கள், தொழிற்சாலை ஊழியர்கள், நிர்வாகிகள், தொழில்நுட்பசாலிகள் எழுத்தர்கள் ஆகியோர் இறுதியில் 4 லட்சம் பேர்களுக்குமேல் தேவையான இயந்திரங்களுககு வடிவமைப்புத் தருதல். அவற்றைக கட்டுதல், சோதித்தல், இயககுதல் முதலிய பணிகளில் ஈடுபட்டனர்.

ஏவுகணைகள் விண்வெளிக் கப்பல்கள், கண்காணிக்கும் ஏரியல்கள், கணிதப் பொறிகள், ஏவும் தளங்கள், மீட்கும் வசதிகள் முதலியன தேவை ஆயின. விண்வெளி விமானிகள் தெரிந்தெடுக்கப்பெற்றுஅவர்களுக்குப் பயிற்[illegible] யிருந்தது. இ[illegible] யாருமே முயற்சி செய்யா

வெளித் திட்டத் தயாரிப்பாளர்கள் தமது மாபெரும் முயற்சிக்குத் தேவையான தளவாடங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை உணர்ந்தனர், அவற்றைஅவ்வாறு அமைக்கலாயினர்.

படிப்படியாக வளர்ச்சி அடைந்ததிட்டம் இது. முதல் முதலில் 1961-ல் குறைச்சுற்று விண்வெளிப் பயணம் இரண்டு தடவை விண்வெளிவிமானிகள் நடத்தினர். (விண்வெளி சென்று, விண்வெளிப்பாதை ஒன்றை அடையாமல் திரும்பிவிடும் பயணம் இது).

பின்பு 1962, 1963-ல் மெர்ககுரித் திட்டம் நடந்தது. சின்னஞ்சிறு விண்வெளிக் கப்பலில் ஒரே ஒரு விண்வெளி விமானி பூமியைச் சுற்றிவரும் குறுகிய காலப் பயணங்கள் இவை. அடுத்தபடி 1965, 1966-ல் 20 மாத காலத்தில் இரண்டு விமானிகள் பயணம்செய்யும் ஜெமினித்திட்டம் நடந்தேறியது. ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட இரண்டு வாரம் பிடித்த 10 விண்வெளிப்பயணங்கள் நடந்தன.

### படிப்படியாக

விண்வெளி விமானிகள் விண்வெளிப் பயணம் நடத்

## 'ஓர் ஏக்கர் நிலத்தில 250 புசல் நெல்விளைகிறது'

## ஜப்பானில் விவசாய அபிவிருத்திபற்றி விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

''யப்பானில் ஓர் ஏக்கர் நிலத்தில் 250 புசல் நெல் விளைகிறது. அங்கு அரசாங்கம் விவசாயிகளுக்குப் போதிய உதவியளித்து ஊக்கப்படுத்துகிறது. அதனால்தான் யப்பான் விவசாயத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இலங்கையிலும் அரசாங்கம் விவசாயிகளுக்கு போதிய உதவியளித்தால் இங்கும் ஓர் ஏக்கரில் 200 புசல் நெல் உற்பத்திசெய்யலாம்.''

மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் நடந்த கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு. வி. குமாரசாமி 'யப்பானில் விவசாய அபிவிருத்தி' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் திரு. சு. நல்

டிராக்டர் மூலம் சாவகச்சேரி நகரசபையிலிருந்து தினமும் ஒவ்வொரு பாரம் எரு கொண்டுவந்து பயன் படுத்தலாம்.

இந்த நிலத்திற்கு எந்தப் பயிரை உற்பத்திசெய்யலாம் என்பதை அறியவேண்டும். நிலத்திற்கு ஏற்ற பயிரைத்தான் பயிரிடவேண்டும். இறுங்கு பயிரிடுவதானல் தண்ணீர் அதிகம் தேவைப்படாது. ஓர் ஏக்கரில் இறுங்கு உற்பத்திசெய்தால் 50 புசல் பெறலாம்.

நிக்கவரெட்டியா என்ற இடத்தில் மணல்தான் அதிகம். கடலை, பயறு, உழுந்து எல்லாம் உற்பத்தி செய்து கடைசியில் இறுங்கு உற்பத்திசெய்தேன். இதன் மூலம் அதிக லாபம் கிடைத்தது. இறுங்கு உற்பத்தி செய்தால் பட்சிகளின் தொல்லை அதிகமாக இருக்

### ''அரபுப்பிரச்னையை எப்படி தீர்ப்பது?''

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையில் இன்று அரபிய மக்களின் பிரச்னையை வைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் அடுத்த தேர்தலில் முஸ்லிம் மக்களின் வாக்கைப் பெறுவதில் போட்டி போடுகின்றனர். அராபிய மக்களுககாக கண்ணீர்விடும் இவர்கள் அரபிய மக்களின் பிரச்னை எவ்வாறு தீர்க்கப்படவேண்டும் என்பதற்குப் பதில் கூறத் தயாராகவில்லை.

மேற்கண்டவாறு இம்மாதம் 13ம் திகதி ஆஸாத் வீதியில் நடைபெற்றபாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இலங்கை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யத் யூனியனுக்கும் இருந்து வரும் போட்டி பூமண்டலத்தின் அமைதியை மட்டுமல்ல சந்திரனின் அமைதியையே கெடுத்துவிடுமோ வென்ற அச்சமும் ஐயமும் இங்கு ஏற்படாமலில்லை. இருவல்லரசுகளும் இணைந்து இந்த முயற்சியிலீடுபட்டிருந்தால் சந்திரனில் இதுவரை மனிதன் சென்று குடியேறியிருக்கும் வாய்ப்பு கிடைத்திருக்காவிட்டாலும் சந்திரனைப்பற்றியதகவல்களை முற்றுக அறிந்து மனிதகுல அமைதிக்கும்முன்னேற்றத்துக்கும் மேற்மென்பதை உணர்ந்து நமது நாட்டின் அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் உழைக்க ஓரளவாவது சிந்தனையைத் தூண்டிவிட உதவவேண்டும்.

மனிதகுல அமைதிக்கும், முன்னேற்றத்துக்கும் அவர்களின் முயற்சியும் துணிவும் வழிகாட்டவேண்டும்என்றநம்பிக்கையுடன் 'சென்றுவருக! வென்றுவருக!' என்றுமீண்டும் மீண்டும் வாழ்த்திஇன்று சந்திரனை நோக்கிப் புறப்படும் மூன்று விண்வெளி வீரர்களையும் வழியனுப்பி வைக்கிறோம்.

# "உலகெங்கும் பரந்துள்ள 'வள்ளுவம்' என்றதத்துவம்"

அச்சுவேலி, செவ்வாய்

"வள்ளுவர் இன்று நம்மிடையே இல்லாது போனுலும் அவர் கருத்துக்கள் கம்பராமாயணம் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் வழிவழியாக வந்து கொண்டிருப்பதைக் காணலாம். இன்று வள்ளுவர் கருத்துக்கள் பல் வேறு மொழிகளிலும் பரந்து வள்ளுவம் என்ற தத்துவமாகக் காட்சி அழிக்கின்றது."

இவ்வாறு அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியில்நடைபெற்ற வள்ளுவர் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. இ. சங்கரப்பிள்ளை குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில் "இன்றைய உலகில் கிளம்பும் எந்தப் பிரச்சனையையும் வள்ளுவர் தந்த பொதுமறையை நன்குணர்ந்து அதன்படி ஒழுகக் கூடிய எவரும் எளிதில் தீர்வு காண முடியும்" என்றார்

திருக்குறள் சம்பந்தமான பேச்சுப் போட்டிகள் நடைபெற்றன.

## இடமாற்றம்

புலோலி, செவ்வாய்

புலோலி கிராமசபையில் வருமான வேலை மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் திரு. கே. கனகரத்தினம் இம்மாதம் 15-ந்திகதி தொடக்கம் உரும்பிராய்பட்டின சபைக்கு இடமாற்றப் பட்டுள்ளார்.

உரும்பிராய் பட்டின சபையில் கடமை யாற்றும் வருமான வேலைமேற்பார்வையாளர் திரு. க. தம்பித்துரை உடுவில் கிராம சபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## புதிய ஜே. பி.



அளவெட்டி, செவ்

மல்லகாம் கிராமசபையின் புதிய தலைவர் திரு. வி. பொன்னம்பலம் மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஆனந்த குமாரசாமி முன்னிலையில் சமாதான நீதவானுக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

1953-ம் ஆண்டு முதல் மல்லாகம் கிராமசபையின் அங்கத்தவராகஇருந்துவந்த திரு. வி. பொன்னம்பலம் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதும் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டார்.

மல்லாகம் கிராமசபையின் தலைவராக மீண்டும் 11-7-69-ல் தெரிவுசெய்யப்பட்ட திரு. வி. பொன்னம்பலம்அளவெட்டிபலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின்தலைவராகவும் கடமையாற்றி வருகிறார். இவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வட பகுதிக் கிளைச்செயலாளராகவுமிருக்கிறார்.

செய்து அம்புலியை அடைவர்.

பின்னர் ஆம்ஸ்ட்ராங், ஆல்டிரின் ஆகிய இருவரும் சுழற்றக்கூடிய நிலா வாகனத்தில் புகுந்து கொண்டு அதிலிருந்தபடியே அம்புலியில் இறங்குவர். அம்புலியில் 22 மணி நேரம் தங்கியிருப்பர்.

### அம்புலிமீது முதல் மனிதர்

பலமணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு ஆயத்தங்கள் செய்த பின்னர் தலைமை விமானி என்ற முறையில் ஆம்ஸ்ட்ராங் நிலா வாகனத்திலிருந்து வெளியே வந்து அம்புலியின்மீது அடியெடுத்து வைப்பார். சில நிமிடங்கள் கழித்து ஆல்டிரின் வெளியே வருவார். அவரும் அம்புலியில் இறங்குவார். ஆம்ஸ்ட்ராங்தான் அம்புலியில் அடியெடுத்து வைத்த முதல் மனிதர் என்ற சிறப்பினைப் பெறப் போகிறவர். அம்புலி கண்ட முதல் உயிரினமே இவராக இருக்கலாம்.

இவ்விரண்டு பேர்களும் அம்புலியில் தனியாக இருந்தாலும் கோடிக்கணக்கான மக்கள் அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பர். அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பர். உலகின் வரலாற்றிலேயே ஒரு நிகழ்ச்சியை இதற்கு முன் ஒருக்காலும் இத்தனை மக்கள் பார்த்திருக்கமாட்டார்கள்.

விண்வெளி வீரர்களின் விண்வெளிக் கவசங்களில் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகள் அவர்களுடைய முதுகுப் பெட்டகத்திலும் நிலாவாகனத்திலும் இருக்கும் சின்னஞ்சிறு ஒலி பரப்பும் நிலையங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். எனவே அவர்கள் கூறும் ஒவ்வொரு சொல்லும் உலக முழுவதிலும் அஞ்சல் ஆகிவிடும். தாம் பார்ப்பதையும் செய்வதையும் அவர்கள் உடனுக்குடன் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். புது உலகில் (அம்புலி) அவர்கள் முதன் முதலாகச் செய்யும் பணிகளில் ஒன்று சிறிய டெலிவிஷன் கமரா ஒன்றை அம்புலியில் அமைப்பதாகும். பூமியில் நூறு கோடி ஜோடி கண்களும் அந்த விண்வெளிவீரர்களின் ஒவ்வொரு அசைவையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கும், அத்துடன் அம்புலியில் இவ்வீரர்களுக்கு எதிர்ப்படும். முன்பு எக்காலத்திலும் கண்டிராத காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் இக்கண்கள் கண்டு களிக்கும்.

லியன தேவை ஆயின. விண்வெளி விமானிகள் தெரிந்தெடுக்கப்பெற்றுஅவர்களுக்குப் பயிற்சிஅளிக்கவேண்டியிருந்தது. இதற்குமுன் யாருமே முயற்சி செய்யாதிருந்த இணையற்ற பணிகளை விண்வெளி விஞ்ஞானிகள் செய்ய வேண்டியிருந்தது. இவற்றில் பெரும்பாலானவை பூமியில் செயற்கை முறையில்கூட முடியாதவையாகும்.

எண்ணற்ற இணையற்ற சிறப்புகள் பெற்றதிட்டம் இது. இதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றும் 'முதலாவது' என்றே, 'ஒன்றே ஒன்று' என்றே, 'மிகப் பெரியது' என்றே, 'மிகப்பளுவானது' என்றே, 'அதன் வகையிலே இணையற்ற செலவுடையது' என்றேதான் கூறப்படுகிறது

வாரம் பிடித்த 10 விண்வெளிப்பயணங்கள் நடந்தன.

### படிப்படியாக

விண்வெளி விமானிகள் விண்வெளிப் பயணம் நடத்திய அதேசமயத்தில் 1961 முதல் 1968 வரை அமெரிக்கா, விமானிகள் செல்லாத 21 விண்வெளிக் கோள்களை அம்புலிக்கும் அதன் அருகிலும் செலுத்தியது. இக்கோள்களில் 13 கோள்கள் ஒருலட்சத்துக்கு மேற்பட்ட புகைப் படங்களைப் பூமிக்குஅனுப்பி வைத்தன.

1968 பிற்பகுதியில் மூன்று விண்வெளி விமானிகள் அப்பலோ - 7 விண்வெளிப் பயணம் மேற்கொண்டனர். பூமியைச் சுற்றிய 11 நாள் பயணமிது அமெரிக்காவின்

இலங்கை நேரப்படி

## அம்புலி பயணத்தின் முக்கிய கட்டங்கள்

ஜூலை-16

| | |
|---|---|
| இன்று மாலை 7-02 | கென்னடி முனையிலிருந்து புறப்பாடு |
| மாலை 9-46 | பூமியை வலம்வரும் பாதையிலிருந்துவிடுபட்டு நிலாவை நோக்கி கிளம்புதல். |

ஜூலை-19

| | |
|---|---|
| மாலை 10-56 | அம்புலியை வலம்வரத் தொடங்குதல். |

ஜூலை-20

| | |
|---|---|
| காலை 3-11 | அம்புலியை வலம்வரும்பாதை உறுதியாகிறது. |
| மாலை 11-20 | நிலாவாகனம் தாய்க்கப்பலிலிருந்து பிரிகிறது. |

ஜூலை-21

| | |
|---|---|
| காலை 0-44 | தரையிறங்கததக்க பாதையில் நிலாவை வலம்வருகிறது. |
| காலை 1-53 | நிலாத்தரையில் இறங்கியாயிற்று. |
| மாலை 11-47 | ஆம்ஸ்ட்ராங் நிலாத்தரையில் கால் வைக்கிறார். |
| மாலை 0-14 | ஆல்டிரினும் நிலாத்தரையில் இறங்குகிறார் |
| மாலை 0-20 | விண்வெளி விமானிகள் விமானச் சோதனையைத் தொடங்குகிறார்கள். அம்புலித் தரையில் காணும்பொருள்களில் வகைக்கு ஒன்று எடுத்துச் சேர்க்கிறார்கள். |
| மாலை 2-17 | விண்வெளி விமானிகள் நிலாவாகனத்துக்குத் திரும்புகிறார்கள். |
| மாலை 11-20 | நிலாவாகனம் நிலாத்தரையிலிருந்து கிளம்புகிறது. |

ஜூலை-22

| | |
|---|---|
| காலை 3-02 | நிலாவாகனம் தாய்க் கப்பலோடு இணைகிறது. |
| மாலை 10-26 | பூமிக்குப் பயணம். |

ஜூலை-24

| | |
|---|---|
| மாலை 10-19 | பசிபிக்கடலில் வந்து இறங்குதல். |

(இந்நிகழ்ச்சிநிரலை மாற்றினும் மாற்றுவர்)

திரு. வி. குமாரசாமி 'யப்பானில் விவசாய அபிவிருத்தி' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் திரு. சு. நல்லையா தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இக்கூட்டத்தில், குடியேற்றத் திட்டப் பெண்களும், பொறுப்பதிகாரி திரு. அரியநாயகமும், பெற்றோர்களும் கலந்துகொண்டார்கள்.

திரு. வி. குமாரசாமி மேலும் கூறியதாவது:

"இத்திட்டம் ஒரு பொன் புதையல் நான் ஒரு கமக்காரன் என்ற காரணத்தால் அது எனக்கு விளங்குகிறது. இங்கு முக்கியமாக தேவைப்படுவது தண்ணீர். எவ்விதப்பட்டும் தண்ணீர் பெற முயற்சிக்கவேண்டும். மிருசுவிலில் மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாட்டில் தண்ணீர் பெறுவது கஷ்டமாகத்தானிருக்கிறது. நான்கு வழிகளால் தண்ணீரைப் பெற முடியும். முதலாவது, நிலத்திற்கு அடியிலுள்ள தண்ணீரை ஆழமான கிணறுகள் வெட்டிப் பெறலாம். இரண்டாவதாக, பெரிய ஆறுகளை அணைகட்டித் தண்ணீர் பெறலாம். மூன்றுவதாக, கடல்நீரை விஞ்ஞான உதவியுடன் நல்ல நீராக மாற்றலாம். அவுஸ்திரேலியாவில் இதற்கான பரிசோதனை நடக்கிறது. இதன் மூலம் ஒரு சதச் செலவுடன் 100 கலன் உப்புநீரை நல்ல நீராக்கலாம். நான்காவதாக செயற்கை மழை மூலம் தண்ணீர் பெறலாம். இந்த நான்கு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்தித் தண்ணீர் பெறமுடியும்.

விவசாயிகள் முதலில் நிலத்தின் தன்மையை மாற்றவேண்டும். மண்ணைப் பண்படுத்த எருப் போடவேண்டும். இங்குள்ள நிலத்திற்கு எரு அவசியம்.

செய்து கடைசியில் இறுங்கு உற்பத்திசெய்தேன். இதன் மூலம் அதிக லாபம் கிடைத்தது. இறுங்கு உற்பத்தி செய்தால் பட்சிகளின் தொல்லை அதிகமாக இருக்கும். எனக்கு அப்புக்காத்து தொழிலிலும் பார்க்க விவசாயம் மூலம்தான் கூடிய வருமானம் கிடைக்கிறது விவசாயம் செய்ய எவரும் வெட்கப்படக்கூடாது.

யப்பானுக்கு நான் சென்ற போது இளைஞர்கள்தான் கூடியளவில் விவசாயத்தில் ஈடுபடுவதை நேரில் கண்டேன். இளைஞர்களுக்கு யப்பான் அரசாங்கம் போதிய ஆதரவளிக்கிறது. இலங்கையில் அரசாங்கம் பூரண ஆதரவளிப்பதில்லை. விவசாயத்தில் அக்கறைகொண்டவர்கள்தான் அதில் ஈடுபடவேண்டும்."

யாழ்ப்பாணம், செவ்.

ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போட் லிமிட்டெட்டை நேற்று யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. அதைப் பொறுப்பேற்றுப்பேசிய தலைவர் டாக்டர் கனகரத்தினம், பல கஷ்டங்களும், தொல்லைகளும் ஏற்பட்டதால் ட்ரேட் அன்ட் ட்ரான்ஸ்போட்லிமிட்டெட் மூடவேண்டி ஏற்பட்டதாகவும், இதைத்தொடர்ந்து நடாத்த பொதுமக்களின் ஆதரவு தேவை என்றும் கூறினார்.

2600 பங்குகளில் அரைவாசிப் பங்குகளை வியாபாரச் சங்கம் எடுத்துள்ளதாகவும், அவர் கூறினார். முதலியார் முத்துத்தம்பி பேசுகையில், ஐக்கிய வியாபாரச் சங்கம் இந்தக் கம்பெனியை பொறுப்பேற்பதால் வேலையிழக்கவிருந்த சுமார் 60 ஊழியர்கள் நன்மைபெறக் கூடியதாகவிருக்கிறது என்றார்.

(கா. நி.

இன்று

# ஆடிப் பிறப்பு

ஆடிப் பிறப்பு இன்றைக்கு
ஆடி மகிழ்வோம் நின்றெங்கும்
கூடித் தின்போம் கொழுக்கட்டை .
குலவி மகிழ்வோம் நாமொன்ருய்.
0
கூடிக் குடிப்போம் ஆடிக்கூழ்
குடித்துக் களிப்போம் தேடிக்கூழ்
பாடி மகிழ்வோம் பாலர்நாம்
பண்பு மிக்க சிலர் நாம்.

முருகசூரியன்

மேற்கண்டவாறு இம்மாதம் 13ம் திகதி ஆஸாத் வீதியில் நடைபெற்றபாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இலங்கை சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசச்செயலாளர் திரு. வி. ஏ. கந்தசாமி கூறினார்.

இக் கூட்டத்துக்கு எம். ஏ. ஸி. இகபால் தலைமை வகித்தார். சுபைர் இளங்கீரன் கே. செந்திவேல் உட்பட பலர் உரையாற்றினர்.

பாரத ஜனதிபதி தேர்தல்

## இம்மாதம் தி.மு.க முடிவெடுககும்

சென்னை, ஜூலை 15

ஜனுதிபதித் தேர்தலைப் பற்றி ஒருமுடிவெடுக்க ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கூடி ஆலோசனை நடத்த வேண்டுமென தமிழக முதல்வர் திரு. மு. கருணுநிதி இன்று கூறினார்.

ஜனுதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி சார்பில்யாரை நிறுத்துவது என்பதைப் பற்றி தி. மு. கழகம் இம்மாத இறுதியில் கூடிஆலோகிககும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனத்தின் சார்பில்நாளைக்காலை கிளிநொச்சி ஈஸ்வரன் தியேட்டரில் விவசாயிகள் மகாநாடு ஆரம்பமாகும்.

மாநாட்டில் சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் கட்சிச்செயலாளர் திரு. என். சண்முகதாசன், திரு. டி. டி. பெரேரா, திரு. வி. ஏ. கந்தசாமி ஆகியோரும் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

நாளை மாலை கிளிநொச்சி றெட்றிக்கோ மைதானத்தில் திரு. ஆ. கந்தையா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் என். சண்முகதாசன், டி. டி. பெரேரா, எஸ். சிவதாசன், கே. செந்திவேல் வி. ஏ. கந்தசாமி ஆகியோரும் மற்றும் பலரும் பேசுவார்கள். ஊர்வலம் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து நாளை மாலை ஆரம்பமாகும். நாடகம், வில்லுப்பாட்டு உட்பட கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இம்மகாநாட்டிற்கு பத்து தீர்மானங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 16ம் திகதி ஆச் [illegible] வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org